Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

தமிழ் Mirror

WEDNESDAY, JULY 27, 2022

புதன்கிழமை ஜூலை 27, 2022 | ஒளி: 08 கதிர்: 60 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | Free

# கோட்டா மீண்டும் வருவார்



மஹேஸ்வரி விஜயனந்தன்

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சிங்கப்பூரில் தலைமறைவாக வாழவில்லை என தெரிவித்த ஊடகத்துறை அமைச்சரும்,

தொடர்ச்சி P2

# இலங்கைக்கு எமது ஆதரவு உண்டு

## ஜனாதிபதியையும் வாழ்த்தினார் இந்திய பிரதமர்



ரணில் விக்கிரமசிங்க புதிய ஜனாதிபதியாக தெரிவானதை அடுத்து இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஜனாதிபதிக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். நிறுவப்பட்ட ஜனநாயக வழிமுறைகள் மூலமாகவும், அரசியலமைப்பு கட்டமைப்பின் மூலமாகவும் ,

தொடர்ச்சி P2



தேசிய அரசாங்கம் தொடர்பில்

# அதிகாரபூர்வ அழைப்பு எவருக்கும் வரவில்லை

## த.மு.கூ. தலைவர் மனோ கணேசன்

தேசிய அரசாங்கம் அல்லது சர்வகட்சி அரசாங்கம் அமைப்பது தொடர்பில், அரசாங்கத்திடமிருந்து எமக்கு இதுவரை அதிகாரபூர்வ அழைப்பு எதுவும் வரவில்லை. ஏனைய எதிர்க்கட்சிகளுக்கும் அதிகாரபூர்வ அழைப்புகள் வரவில்லை. ஆகவே அதற்குள் பேச்சுகள் நடக்கின்றன; அமைச்சர்கள் ஆகிறார்கள் என்பவை எல்லாம் வெறும் சுவாரசிய செய்திகளாக மட்டுமே இருக்கின்றன என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். நாடு இன்று இருக்கும் அவதி நிலையில், ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்துக்கு நாட்டை இயல்பு நிலைக்கு கொண்டுவர அவகாசம் கொடுக்க வேண்டும் எனவும், அவசரப்பட்டு எதிர்ப்பு அரசியல் ஆர்ப்பாட்டங்களை செய்யக்கூடாது எனவும், தமிழ் முற்போக்கு கூட்டணி நம்புகிறது என கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பி ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



அவசரகால சட்டத்துக்கு

# சஜித் அணி எதிர்ப்பு

தமக்கான உரிமையை கோரி போராட்டம் நடத்தும் நாட்டு மக்களின் உரிமைகளை ஒடுக்கும் நோக்கில் கொண்டுவரப்பட்ட அவசரகாலச் சட்டத்திற்கு எதிராக வாக்களிக்க ஐக்கிய மக்கள் சக்தி ஏகமனதாக தீர்மானித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் பாராளுமன்றக் குழுக்கூட்டம் மற்றும் செயற்குழுக் கூட்டம் என்பன நேற்று (26) கூடி நிகழ்கால அரசியல் செயற்பாடுகள் குறித்து ஆராய்ந்திருந்தனர்.

பாராளுமன்றத்தில் இன்றைய தினம் (27) விவாதிக்கப்படவுள்ள அவசரகால சட்டம் குறித்தும், அதன் வாக்கெடுப்பின் போது பிரதான எதிர்க்கட்சியாக அவசரகால சட்டத்தை எதிர்க்கவும் தீர்மானித்துள்ளனர். குறிப்பாக, கருத்துத் தெரிவிக்கும் உரிமை, போராட்டம் நடத்துவதற்கான உரிமை மற்றும் மக்கள் அன்றாடம் சந்திக்கும் பிரச்சினைகளுக்கு எதிராக போராட்டம் நடத்தும் உரிமைகளை ஒடுக்கும் நோக்கில் கொண்டு வரப்பட்ட அவசரகாலச் சட்டத்திற்கு எதிராக வாக்களிக்க ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரம்

# ரணிலுக்கு மைத்திரி இடையூறு



உயிர்த்த ஞாயிறு தாக்குதலை தடுத்து நிறுத்தாமை தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மனுவின் பிரதிவாதியாக பெயரிடப்பட்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அரசியலமைப்பு சட்டத்தில் கிடைக்கும் விடுதலைக்கு அமைய, அவரை பிரதிவாதி பொறுப்பு கூறலிலிருந்து நீக்குவதற்கு தாம் எதிர்ப்பை தெரிவிப்பதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2


# தொல்பொருள் சேதங்கள் தொடர்பில் விசாரணை



ஜனாதிபதி மாளிகையிலுள்ள தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த பொருட்களை சேதமாக்கியமை தொடர்பில் இன்று (27) விசாரணை நடத்தப்படும் என தொல்பொருள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த விசாரணைகளுக்காக மேல் மாகாண பிராந்திய அலுவலக அதிகாரிகளைக் கொண்ட விசேட குழுவொன்று நியமிக்கப்படவுள்ளதாக தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், பேராசிரியர் அநுர மனதுங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



# மீட்சிக்கு என்ன வழி

## நிபுணர்களுடன் கலந்துரையாடியுள்ளார் ஜூலி சங்

பொருளாதார நெருக்கடிகளில் இருந்து மீள்வதற்கான உறுதியான வேலைத்திட்டங்கள் குறித்து இலங்கையின் பொருளாதார நிபுணர்கள் மற்றும் கொள்கை வரைபு நிபுணர்களுடன் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் கலந்துரையாடியுள்ளார். அத்துடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணங்களை வழங்குவது அவசியம் எனவும் அமெரிக்க தூதுவர் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# பாராளுமன்றம் இன்று கூடுகிறது



இடைக்கால ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டதன் பின்னர், பாராளுமன்றம் முதல் தடவையாக இன்று மு.ப 10 மணிக்குக் கூடவிருக்கின்றது.

தொடர்ச்சி P2

# போராட்டக்காரர்கள் ஆயுதம் ஏந்த மாட்டார்கள்


பா.நிரோஸ்

போராட்டக்காரர்களுக்கு ஆயுதமேந்துவதற்கான எந்தவிதமான நோக்கங்களும் இல்லை என தெரிவித்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன, ஜனநாயக ரீதியாக தேசிய சபை ஒன்றை அமைக்க வேண்டுமென்பதே போராட்டக்காரர்களின் கோரிக்கையாக உள்ளதாகவும் தெரிவித்தார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை இலங்கையும் உலக நாடுகளும் எதிர்க்கின்றன எனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# தங்கக்கட்டி, வலம்புரியுடன் பேசாலையில் மூவர் கைது





நாட்டிலிருந்து சட்டவிரோமான முறையில், கடல் வழியாக கடத்துவதற்கு முயன்றபோது, 470 கிராம் நிறையுடைய தங்கக் கட்டி மற்றும் வலம்புரி சங்கு ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர். சந்தேகத்தின் பேரில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் மன்னார், பேசாலை, புத்தளத்தைச் சேர்ந்தவர்கள் என விசாரணைகளில் இருந்து கண்டறியப்பட்டுள்ளது.

மன்னார், பேசாலை குருசபாடு பிரதேசத்துக்கு அண்மையிலுள்ள கடற்கரையில், ஜூலை 25 ஆம் திகதி இரவு மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கைகளின் போதே,

தொடர்ச்சி P2

# தீர்வுகள் இப்போது கிடைக்காது

## தேவைக்கு அதிகமாக பணம் அச்சடித்தமையே நெருக்கடிக்கு காரணம்

ஆர்.யசி

கடந்த காலங்களில் தேவைக்கு அதிகமாகவும், அநாவசியமாக பணம் அச்சடித்ததன் காரணத்தால் இன்று பணவீக்கத்திற்கு முகங்கொடுக்க நேர்ந்துள்ளது. சிம்பாபேயின் நிலைமை இலங்கைக்கு ஏற்பட்டால் மிக மோசமான தாக்கங்களுக்கு மக்கள் முகங்கொடுக்க நேரிடும் என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார். இப்போது தீர்வுகளை எதிர்பார்க்க முடியாது. நாடு முழுமையாக வீழ்ச்சி கண்ட பின்னர் உடனடியாக மீட்டெடுக்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



# நான்காவது தடுப்பூசியை விரைந்து வழங்க ஏற்பாடு



கொரோனா வைரஸ் தொற்று கட்டுப்பாட்டிற்காக நான்காவது தடுப்பூசியையும் வழங்குவதற்கு விரைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் ஜூலை (25) நடைபெற்ற கலந்துரையாடலில் தற்போதைய சுகாதார நிலைமை தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டதாக சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக்க சந்திரகுப்த தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# QR முறையின் மூலம் மில்லியன் பேர் பதிவு




மஹேஸ்வரி விஜயனந்தன்

மக்களுக்கான எரிபொருள் விநியோகத்தை உறுதிப்படுத்த ஆலோசனைக் குழு மற்றும் அதிகாரிகள் குழுவொன்றை நியமிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதென தெரிவித்த அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன, எரிபொருள் கொள்வனவின் போது நெருக்கடிக்கு உள்ளாகும் மக்கள் QR முறையின் மூலம் அடுத்த மாதத்திலிருந்து இலகுவாக எரிபொருளை கொள்வனவு செய்ய முடியும் என்றார்.

தொடர்ச்சி P2

வேலைக்காரிக்கு பிறந்த சிசு கொலை;

# ஐந்து வருடங்களின் பின் வைத்தியர் கைதானார்

கனகராசா சரவணன்

மட்டக்களப்பில் வைத்தியர் ஒருவரின் வீட்டில் வேலைக்காரியாக கடமையாற்றி வந்த பெண் ஒருவருக்கு பிறந்த சிசு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் ஐந்து வருடங்களின் பின்னர் வைத்தியர் ஒருவர், மட்டக்களப்பு தலைமையக பொலிஸாரால் நேற்று முன்தினம் (25) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமையாற்றுவதற்காக நியமிக்கப்பட்ட குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த வைத்தியர் ஒருவர், மேல்மாடி வீதியில் வீடு ஒன்றை வாடகைக்கு பெற்று தங்கியிருந்துள்ளார்.

இந்நிலையில், அவர் அம்பாறை - மத்திய முகாமைச் சேர்ந்த 38 வயதுடைய பெண்ணை தனது வீட்டு வேலைக்கு அமர்த்திய நிலையில், 2017 மார்ச் 26ஆம் திகதி குறித்த வேலைக்காரிக்கு ஆண் சிசு பிறந்துள்ளது.

அதனை சீலையால் சுற்றி, வீட்டின் கிணற்றில் வீசப்பட்டுள்ள நிலையில், வேலைக்காரிக்கு தொடர்ந்து இரத்தப் போக்குக் காரணமாக மார்ச் 26ஆம் திகதி மட்டு. போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதனை தொடர்ந்து மார்ச் 31ஆம் திகதி தனது கிணற்றில் துர்நாற்றம் வீசுவதாக பொலிஸாருக்கு வைத்தியர் முறைப்பாடு செய்ததையடுத்து, பொலிஸார் கிணற்றை சோதனையிட்டனர்.

இதன்போது கிணற்றில் இருந்து சிசுவின் சடலத்தை மீட்டதுடன், வேலைக்காரியையும் கைது செய்து, விசாரணையை முன்னெடுத்தனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## அதிகாரபூர்வ அழைப்பு எவருக்கும் வரவில்லை

தேசிய அரசாங்கம் அல்லது சர்வ கட்சி அரசாங்கம் அமைப்பது தொடர்பில் அதிகாரபூர்வ அழைப்பு வரவில்லை. ஆனால், கட்சி தலைவர்கள் கூட்டத்தின் போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்னிடமும், ஏனைய கட்சி தலைவர்களிடமும் நேரடியாக இது பற்றி கூறினார். ஆனால், கட்சிகளுக்கு சர்வ கட்சி அரசாங்கம் அமைப்பது தொடர்பில், அரசாங்கத்திடமிருந்து அதிகாரபூர்வ அழைப்பு வரவேண்டும்.

அதன் பிறகு நாம் எமது கட்சிகள் மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணி அரசியல் குழுக்கள் மத்தியில் இதுபற்றி பேசுவோம். அதேபோல் ஐக்கிய மக்கள் கூட்டணி தலைமைக்குழுவிலும் பேசுவோம். இதுதான் ஒரு பொறுப்புள்ள நேர்மையுள்ள ஜனநாயக அரசியல் கட்சி செய்ய வேண்டிய முறைமை. அதை நாம் செய்வோம். எமது முடிவுகளை எமக்கு வாக்களித்து தெரிவு செய்துள்ள, எமது மக்களின் நலன்களை முன்னிட்டு, நாம் ஒற்றுமையாக எடுப்போம்.

அதேவேளை, நாடு இன்று இருக்கும் அவதி நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்துக்கு நாட்டை இயல்பு நிலைக்கு கொண்டுவர அவகாசம் கொடுக்க வேண்டும் எனவும், அவசரப்பட்டு எதிர்ப்பு அரசியல் ஆர்ப்பாட்டங்களை செய்யக்கூடாது எனவும் தமிழ் முற்போக்கு கூட்டணி திடமாக நம்புகிறது. அதுவே எங்கள் மக்களின் நிலைப்பாடாகவும் இருக்கிறது. பெரும்பான்மை அரசியல் கட்சிகளின் நலன்களை சார்ந்து மாத்திரம் தமிழ் முற்போக்கு கூட்டணி அரசியல் செய்யாது.

அரசில் சேருகிறோமோ, இல்லையோ, புதிய அரசியலமைப்பு தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள அமைச்சருடன் நாம், மலையக தமிழ் இலங்கையர்களின் அரசியல் அபிலாஷைகளை முன் வைப்போம். அடுத்து வரும் அரசியலமைப்பு திருத்தத்தில் எமது மக்களின் எதிர்பார்ப்புகளை இடம்பெறச்செய்ய எம்மால் ஆனதை நாம் பொறுப்புடன் செய்வோம் என தெரிவித்துள்ளார்.

## கோட்டா மீண்டும் வருவார்

அமைச்சரவை பேச்சாளருமான பந்துல குணவர்தன, அவர் சிங்கப்பூரில் சட்ட ரீதியாகவே தங்கியுள்ளார் என்றார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (26) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்ட போதே மேற்கணடவாறு தெரிவித்தார்.

கோட்டாபய ராஜபக்ஷ தலைமறைவாக இருப்பதாக தெரிவிக்கப்படும் கருத்துகளை தான் நம்பப் போவதில்லை, ஏனெனில் அவர் உத்தியாகப்பூர்வமாக அந்த நாட்டுக்கான விசாவைப் பெற்றே சென்றார் என கூறிய அமைச்சர், அவருக்கிருக்கும் உரிமைகளுக்கு அமைய அவர் இலங்கைக்கு திரும்பவுள்ளதாக தான் அறிந்துகொண்டதாகவும், அவர் நாட்டுக்கு வருகை தரும் திகதி, விவரம் குறித்த தகவல்கள் தனக்கு தெரியாது எனவும் அமைச்சர் பந்துல இதன்போது கூறினார்.

## சஜித் அணி...

மேலும், மக்கள் பிரச்சினைகளுக்கு உண்மையான தீர்வுகளை வழங்காமல் அரச பயங்கரவாதத்தை நேரடியாகவும் மறைமுகமாகவும் கட்டவிழ்த்துவிடும் அடக்குமுறை அரசாங்கத்துடன் கூட்டுச் சேராதிருப்பதாக தீர்மானிக்கப்பட்டது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் சிலர் இன்றைய தினம் இணைந்துகொள்வார்கள் என தெரிவிக்கப்படும் நிலையில், அது குறித்து கலந்துரையாடியுள்ளனர்.

அத்துடன் பாராளுமன்ற ஜனநாயக அமைப்பில் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் முகமாக பாராளுமன்றத்தில் குழு முறைமையொன்று ஸ்தாபிக்கப்பட்டால், அதற்கு ஆதரவளிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## ரணிலுக்கு மைத்திரி இடையூறு

உயர் நீதிமன்ற நீதியரசர்கள் எழுவர் அடங்கிய குழாம் முன்னிலையில் மைத்திரிபால சிறிசேன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கின் பிரதிவாதியாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தனத சட்டத்தரணியான ஜனாதிபதி சட்டத்தரணி பைஸர் முஸ்தபா ஊடாக இதனை நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் அறிவித்துள்ளார்.

இந்த மனுவின் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, புவனேக அலுவிஹார, பிரியந்த ஜயவர்தன, எல்.டி.பி.தெஹிதெனிய, முர்து பெர்ணான்டோ, எஸ்.துரைராஜா, காமினி அமரசேகர ஆகியாரைக் கொண்ட உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாமால் நேற்று (26) விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்டது.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, மனுவின் பிரதிவாதியாக பெயரிடப்பட்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அரசியலமைப்பு சட்டத்தில் கிடைக்கும் விடுதலைக்கு அமைய, அவருக்கு எதிராக வழக்கு தொடர முடியாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சார்பில் சட்டத்தரணி சுரேன் பெர்ணான்டோ நீதிமன்றில் அறிவித்தார்.

அதற்கமைய, இது தொடர்பான காரணங்களை முன்வைக்க சகல பிரதிவாதிகளுக்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படும் என அறிவித்த உயர்நீதிமன்றம் இந்த மனுவை இன்று (27) விசாரணைக்கு எடுக்க உத்தரவிட்டது.

இந்த மனுவானது இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் காயமடைந்த மற்றும் உயிரிழந்தவர்களின் உறவினர்கள், கத்தோதலிக்க பாதிரியார்கள் உள்ளிட்ட 12 பேர் தாக்கல் செய்துள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அமைச்சரவை முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, முன்னாள் அரச புலனாய்வுப் பிரிவின் பிரதானி நிலந்த ஜயவர்தன, தேசிய புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர் சிசிர மெண்டிஸ் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

## தொல்பொருள் சேதங்கள்...

ஜனாதிபதி மாளிகையின் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த பொருட்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள சேதங்கள் தொடர்பிலான விசாரணைகள் இதுவரை நிறைவு செய்யப்படவில்லை எனவும் சேத மதிப்பீட்டு நடவடிக்கைள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் பணிப்பாளர் நாயகம் கூறினார். எனவே சேத மதிப்பீடுகள் தொடர்பில் பரப்பப்படும் தகவல்களில் எவ்வித உண்மையும் இல்லை என அவர் குறிப்பிட்டார்.

அதற்கமைய, ஜனாதிபதி மாளிகையில் தொல்பொருள் ஆய்வுகளை மேற்கொண்டதன் பின்னர், சேத விபரங்கள் தொடர்பில் தயாரிக்கப்படும் அறிக்கையானது ஜனாதிபதியின் செயலாளர், பொலிஸார் மற்றும் ஏனைய பாதுகாப்பு பிரிவினரிடம் கையளிக்கப்படும் என பேராசிரியர் அனுர மனதுங்க தெரிவித்தார்.

## தங்கக்கட்டி,...

அந்தப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன. தங்கத்தின் உள்ளூர் பெறுமதி 9 மில்லியன் ரூபாயென மதிப்பிடப்பட்டுள்ளது. கடற்படையினரின் பொறுப்பின் கீழ் கொண்டுவரப்பட்டவர்கள் 24 மற்றும் 39 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனத் தெரிவித்த கடற்படையினர், இவர்கள் புத்தளம் மற்றும் பேசாலை ஆகிய இடங்களை வசிப்பிடமாகக் கொண்டவர்கள் என இனங்காணப்பட்டுள்ளது. டிங்கி படகின் ஊடாகவே இந்தப் பொருட்களை கடல்வழியாக சட்டவிரோதமான முறையில் கடத்துவதற்கு அவர்கள் முயற்சித்துள்ளனர் என்பது ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது என்றும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

## QR முறையின் மூலம்

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (26) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

QR தொழிநுட்ப முறையானது தற்போது மிகவும் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதுடன், இதுவரை 40 இலட்சம் பேர் பதிவு செய்துள்ளனர் என்றார். இதற்கமைய இந்த முறையை செயற்படுத்திய 245 எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் 70,123 வாகனங்கள் எரிபொருளைப் பெற்றுக்கொண்டது என்றார்.

இந்த QR முறையைப் பயன்படுத்தி எரிபொருள் விநியோகிக்கும் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு மேலதிகமாக தனியார் பஸ்கள், பாடசாலை சேவைகள், அம்பியூலன்ஸ்கள் என்பவற்றுக்கு 107 டிப்போக்கள் மூலம் எரிபொருள் விநியோகிக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

அனைத்து ஓட்டோக்கள் மற்றும் விவசாய கைத்தொழில் இயந்திரங்களை அந்த மாகாணங்களின் பொலிஸ் மற்றும் பிராந்திய செயலாளர்கள் மூலம் பதிவு செய்து, அடுத்த இரண்டு நாட்களுக்குள் பெற்றோலிய அமைச்சுக்கு தரவுகள் கிடைக்க ஏற்பாடு செய்யுமாறு பெற்றோலிய அமைச்சர் உரிய அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டதாகவும் அமைச்சர் தெரிவித்தார். நாட்டில் அந்நிய செலாவணி பிரச்சனைகள் இருந்தாலும் மக்களுக்கு எரிபொருள் வழங்கப்படும் என தெரிவித்த அமைச்சர், எரிபொருளை மிகவும் சிக்கனமாக பயன்படுத்துமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

## மீட்சிக்கு என்ன வழி

இலங்கையின் பொருளாதார நிபுணர்கள் மற்றும் கொள்கை வரைபு நிபுணர்கள் குழுவொன்றை நேற்று (26) சந்தித்திருந்த இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், இலங்கையின் நெருக்கடி நிலைமைகள் குறித்தும், துரித மற்றும் ஸ்திரமான தீர்வுகளை நோக்கிய பயணத்திற்கு அவசியமான காரணிகள் குறித்தும் கலந்துரையாடியுள்ளார்.

பொருளாதார ஸ்திரத்தன்மையை மீட்டெடுக்கவும், இலங்கை மக்களுக்கு நிவாரணம் வழங்கவும் உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம் என்பதை சுட்டிக்காட்டியுள்ள அவர், இலங்கை நெருக்கடி நிலைமைகளில் இருந்து முன்னோக்கி செல்வதற்கான பாதையை உருவாக்கிக்கொள்வதிலும், நிலையான பொருளாதார கொள்கையை உருவாக்கிக்கொண்டு வளர்ச்சியை ஏற்படுத்துவது குறித்த வேலைத்திட்டங்களை நிபுணர்களுடன் கலந்துரையாடியுள்ளார். இலங்கைக்கான ஒத்துழைப்பு வேலைத்திட்டங்களை முன்னெடுக்க அமெரிக்கா எப்போதும் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## தீர்வுகள் இப்போது...

சர்வதேச நாணய நிதியத்துடன் நாம் கொள்கை மட்டத்திலான இணக்கப்பாட்டை உருவாக்கிக்கொள்ள வேண்டும். அதன் பின்னரே ஏனைய வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியும். இப்போது வரையில் சர்வதேச நாணய நிதியத்துடன் எந்தவித இணக்கப்பாட்டிற்கும் வரவில்லை. ஆகஸ்ட் மாதமளவில் இணக்கப்பாட்டிற்கு வர முடியும் என நம்புகின்றோம். இப்போதுள்ள நிலைமையில் காலம் கடத்தப்படுகின்றது என்பதே எமக்கிருக்கும் பிரச்சினையாகும்.

சிம்பாபே போன்றதொரு நிலைமை இலங்கைக்கு ஏற்பட்டால் மிக மோசமான தாக்கங்களுக்கு மக்கள் முகங்கொடுக்க நேரிடும். அதிகளவில் பணம் அச்சடிக்கும் நிலையொன்று ஏற்படும். அதனை தடுக்கவே நாம் சகலரும் முயற்சிக்கின்றோம். கடந்த காலங்களில் தேவைக்கு அதிகமாகவும், அனாவசியமாகவும் பணம் அச்சடித்ததன் காரணத்தினால் இன்று பணவீக்கத்திற்கு முகங்கொடுக்க நேர்ந்துள்ளது.

இப்போதும் 22 சதவீதத்தால் நாட்டின் வட்டி வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் இன்னமும் நாம் மோசமான பணவீக்கம் கொண்ட நாடாக மாறவில்லை. பணவீக்கம் நூறு வீதத்தை அடையவில்லை. புதிதாக ஒரு ட்ரில்லியன் ரூபா கடனாக பெற்றுக்கொள்வது குறித்து தீவிரமாக ஆராயப்பட்டு வருகின்றது. ஆனால் பணம் அச்சடிக்க இன்னமும் தீர்மானிக்கவில்லை.

இப்போதைய நெருக்கடியில் சகலரும் வலிகளை தாங்கிக்கொள்ள வேண்டியுள்ளது. வலியுடன் கூடிய சிகிச்சையே இருக்கும் ஒரே வழிமுறையாகும். ஒரு சிலருக்கு சலுகையும் ஏனையவருக்கு சுமையும் கொடுக்க முடியாது. அதேபோல் அடுத்த குறுகிய காலத்தில் இறுக்கமான வேலைத்திட்டங்களை முன்னெடுத்தாக வேண்டும். அரச வருமானத்தை அதிகரிக்கவும், அனாவசிய செலவுகளை முழுமையாக வெட்டவும் வேண்டும். ஆனால் இப்போது தீர்வுகளை எதிர்பார்க்க முடியாது. நாடு முழுமையாக வீழ்ச்சி கண்ட பின்னர் உடனடியாக மீட்டெடுக்க முடியாது என்றார்.

## நான்காவது தடுப்பூசியை விரைந்து வழங்க ஏற்பாடு

தடுப்பூசியை செலுத்தும் நடவடிக்கையை இவ்வாரத்திற்குள் முன்னெடுப்பதற்கு தயார் நிலையில் உள்ளதாக அவர் கூறியுள்ளார். கொரோனா நோயாளர்களை அடையாளம் காண்பதற்கான PCR பரிசோதனையை தேவைக்கேற்ப முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். கொத்தணிகளாக கொவிட் நோயாளர்கள் பதிவாகுவார்களாயின், அந்த பகுதிகளை இனங்கண்டு பரிசோதனைகளை நடத்த நடவடிக்கை எடுக்கப்படுமென ஜனக்க சந்திரகுப்த கூறியுள்ளார். இதனிடையே, நாட்டில் ஜூலை 25 கொவிட் தொற்றுக்குள்ளான 75 பேர் அடையாளம் காணப்பட்டனர். அத்துடன், அன்றையதினம் 02 பேர் கொவிட் தொற்றால் உயிரிழந்ததாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## பாராளுமன்றம் இன்று கூடுகிறது

இந்நிலையில், பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பதில் ஜனாதிபதியினால் பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகால நிலைமை அறிவிப்பு பி.ப 4.30 மணி வரை விவாதிக்கப்பட்டு அங்கிகரிக்கப்படவுள்ளது.

2022 ஜூலை 17 ஆம் திகதிய 2288/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அப்போதைய பதில் ஜனாதிபதியினால் இந்தப் பிரகடனம் வெளியிடப்பட்டதுடன், சட்ட விதிகளுக்கு அமைய அவசரகால நிலைமைப் பிரகடனம் 14 நாட்களுக்குள் பாராளுமன்றத்தின் அனுமதி பெறப்படாவிட்டால் இது இரத்தாகிவிடும்.

இலங்கையில் மக்கள் அவசரகால நிலைமை நிலவுவதன் காரணமாக பொது மக்களின் பாதுகாப்பு, நாட்டின் அமைதியைப் பாதுகாத்தல், பொதுமக்கள் வாழ்வுக்கு அத்தியாவசியமான வழங்கல்கள் மற்றும் சேவைகள் என்பவற்றைப் பேணுவதற்குப் பொது மக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைய இந்தப் பிரகடனம் வெளியிடப்பட்டிருப்பதாக வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேநேரம், ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்றதால் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு தேர்தல்கள் ஆணைக்குழுவினால் பெயரிடப்பட்டுள்ள வஜிர அபேர்தன பாராளுமன்ற உறுப்பினராக இன்று (27) பதவிப்பிரமாணம் செய்யவுள்ளார்.

## போராட்டக்காரர்கள் ஆயுதமேந்த மாட்டார்கள்

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (26) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார். அவர் மேலும் கூறுகையில், போராட்டக்காரர்கள் ஜனநாயக ரீதியாக செயற்பட்டு வருகிறார்கள். அவர்கள் மிகுந்த புத்திசாலித்தனமாக நடந்துக்கொள்கிறார்கள். மார்ச் மாதம் இப் போராட்டத்தை ஆரம்பிக்கும் போது இப்போராட்டத்துக்கு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் ஒத்துழைப்பு வழங்கவில்லை. இப்போராட்டத்துக்கு யார் தலைமைத் தாங்குகிறார்கள் என்பது தெரியாதென அவர்கள் கூறினார்கள். ஆனால் நானும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவுமே இப்போராட்டத்துக்கு ஆதரவை வழங்கியிருந்தோம் என்றார்.

சர்வக்கட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு முன்பாக சர்வக்கட்சி மாநாட்டை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூட்டி அதில் போராட்டக்காரர்களையும் கலந்துக்கொள்ள

வேண்டும் எனவும் தெரிவித்தார். ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து எவரும் அமைச்சுப் பதவிகளுக்காக அரசாங்கம் பக்கம் செல்வதாக இல்லை. ஹரின் பெர்ணான்டோ இவ்வாறான கருத்துக்களை கூறிவருகிறார். ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து இத்தனை பேரை நான் எடுத்திருக்கிறேன் என காட்டுவதற்கே ஹரின் இவ்வாறு செய்கிறார். எனினும் ஹரினால் ஒருவரைக் கூட பெற முடியவில்லை. ஜனாதிபதி வாக்கெடுப்பின் போதும் ஐக்கிய மக்கள் சக்தியில் அனைவரும் ரணிலுக்கு ஆதரவாக வாக்களிக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

## இலங்கைக்கு எமது ஆதரவு...

இலங்கையின் ஸ்திரத்தன்மை மற்றும் பொருளாதார மீட்சிக்கு இந்தியா தொடர்ந்து ஆதரவளிக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், மக்களின் பரஸ்பர நலனுக்காக ஜனாதிபதியுடன் நெருக்கமாக பணியாற்ற எதிர்பார்த்திருப்பதாக இந்திய பிரதமர் மீண்டும் வலியுறுத்துவதாக இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

## ஐந்து வருடங்களின்...

இதன்போது, சிசு தனக்கும் வைத்தியருக்கும் பிறந்தாகவும் வைத்தியர்தான் வீட்டில் மகப்பேற்றை நடத்தியதாகவும் பின்னர் சிசிவை தான் கிணற்றில் வீசியதாகவும் தெரிவித்துள்ளார்.

பின்னர் அவர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இதேவேளை, தனக்கும் சிசுவின் பிறப்பு மற்றும் இறப்புக்கு எவ்விதத் தொடர்பும் இல்லை என வைத்தியர் தெரிவித்த நிலையில், நீதிமன்ற உத்தரவுக்கமைய சிசுவின் இரத்த மாதிரியும் வைத்தியரின் இரத்த மாதிரியையும் பெற்று அரச பகுப்பாய்வுக்கு மரபணு பரிசோதனைக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

இந்த மரபணுபரிசோதனையில் குறித்த வைத்தியரின் இரத்த மாதிரியும் சிசுவின் இரத்த மாதிரியும் ஒன்று எனவும் வைத்தியருக்கு பிறந்த சிசு என பரிசோதனையில் கண்டுபிடிக்கப்பட்ட அறிக்கையை அரச பகுப்பாய்வு திணைக்களம் பொலிஸாருக்கும் நீதிமன்றுக்கும் அனுப்பியுள்ளது.

இதனையடுத்து, மட்டு. பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி பிரதான பரிசோதகர் சந்திரகுமார தலைமையிலான பொலிஸார் தொடர் விசாரணையில் திங்கட்கிழமை கண்டி வைத்தியசாலையில் கடமையாற்றிவரும் குறித்த வைத்தியரை பொலிஸ் நிலையத்துக்கு வரவழைத்து, தனக்கு பிறந்த சிசுவை மறுத்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்ததுடன், அவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்தனர்.

# ‘மனிதநேய ஒன்றிணைவு’

‘மனிதநேய ஒன்றிணைவு’ ரூ.200 மில்லியன் பெறுமதியான அவசரகால நிவாரணங்ளை 80,000 க்கும் அதிகளவான குடும்பங்களுக்கு வழங்கியுள்ளது.

அனைத்து இலங்கையர்களையும் பெரு நிறுவனங்களையும் நாடளாவிய ரீதியில் இடம்பெறும் அவசரகால நிவாரணப் பணியுடன் இணையுமாறு அழைக்கின்றது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியின் காரணமாக, அடிப்படைத் தேவைகளை கூட பூர்த்தி செய்ய முடியாத சமூகங்களைச் சேர்ந்த 200,000 குடும்பங்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கும் நோக்கில் முன்னெடுக்கப்படும் மனிதாபிமான செயற்றிட்டமான ‘மனிதநேய ஒன்றிணைவு’ 2022 ஜூலை 11 வரையில் நாடளாவிய ரீதியில் செயல்பட்டு 80,000 க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு 200 மில்லியன் ரூபாய் பெறுமதியான அவசரகால நிவாரணங்களை வழங்கி தனது அடுத்த மைல்கல்லை எட்டியுள்ளது.

மனிதநேய ஒன்றிணைவு

Sarvodaya | Dialog | MAS | HEMAS

CBL | citi | sunshine | HUAWEI

டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, MAS Holdings, Hemas Holdings PLC, CBL Group, Citi, Sunshine Holdings PLC மற்றும் Huawei Technologies Lanka Co Pvt Ltd இந்தத் திட்டத்தின் விநியோக பங்காளரான சர்வோதய சிரமதான சங்கம் மற்றும் சுயாதீன கணக்காய்வு பங்காளியான PwC ஸ்ரீலங்கா ஆகியவற்றால் அறிமுகப்படுத்தப்பட்டு நாடளாவிய ரீதியில் அடிப்படை தேவைகளை கூட பூர்த்தி செய்ய முடியாமல் வறுமையில் வாடும் மக்களுக்கு அவசர நிவாரணம் வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். சுயாதீன தொலைக்காட்சி சேவை, சியத, ஸ்வர்ணவாஹினி, டிவி தெரண மற்றும் வசந்தம் ஆகிய அலைவரிசைகள் ஊடக பங்காளராக இந்தச் செயற்றிட்டத்திற்கு பங்களிப்பு செய்கின்றன.

நாட்டின் தற்போதைய பொருளாதார சூழ்நிலையால் பாதிக்கப்பட்டுள்ள நமது சொந்த மக்களுக்கு அவசரகால நிவாரணம் வழங்குவதற்கான கூட்டு முயற்சியில் இணையுமாறு ஏனைய அனைத்து பெருநிறுவனங்களுக்கு மனிதநேய ஒன்றிணைவு அழைப்பு விடுக்கின்றது. அனைவரும் தங்களின் கிரெடிட்/ டெபிட் கார்ட், வங்கி வைப்பு eZ Cash, Star Points, genie அல்லது 0776 421421 என்ற இலக்கத்திற்கு Top up செய்வதன் மூலம் இணைந்துக்கொள்ள முடியும். நன்கொடை வழங்குதல் தொடர்பாக செயல்முறை பற்றிய மேலதிக தகவல்களுக்கு https://dlg.lk/don_E க்கு செல்லுங்கள்.





தற்போது, நாடளாவிய ரீதியில் 25 மாவட்டங்களிலும் அவசரகால நிவாரணங்கள் விநியோகிக்கப்படுகின்றன, மேலும் ‘மனிதநேய ஒன்றிணைவு’ திட்டமானது, பயனுள்ள பொருளாதார மீட்புத் திட்டத்தின் மூலம் நாட்டில் நிலையான நன்மைகள் நிறுவப்படும் வரை அதன் நிவாரண நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுக்கும். மனிதநேய ஒன்றிணைவு பற்றிய மேலதிக தகவல்களுக்கு https://www.dialog.lk/corporate க்கு செல்லுங்கள்.

## ஆடை ஏற்றுமதி வருமானம்

# 30%ஆல் அதிகரிப்பு

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது மே 2022இல் ஆடை ஏற்றுமதி வருமானம் 446 அமெரிக்க டொலராக அமைந்திருந்ததுடன் அது 30% அதிகரிப்பாக அமைந்திருந்ததை அடுத்து, கூட்டு ஆடை சங்கங்களின் மன்றம் (JAAF) தொழில்துறையில் உள்ள அனைத்து பங்குதாரர்களின் சிறந்த பங்களிப்பைப் பாராட்டியது.

நாட்டின் ஆடைத் துறையானது முன்னெப்போதுமில்லாத சவால்களை எதிர்கொண்டு அதன் இலக்குகளை அடைவதில் தொடர்ந்து தனது பங்களிப்பை வழங்கி வருவதையும் பாராட்டியுள்ளது.

இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) சுமார் 6% பங்களிப்பதோடு, அனைத்து ஏற்றுமதிகளில் ஏறக்குறைய பாதி பங்களிப்பை வழங்குவதால், ஆடைத் தொழில் தேசிய பொருளாதாரத்தின் முதுகெலும்பாக அமைகிறது.

ஆற்றல் வழங்கல் மற்றும் உற்பத்திப் பொருள் நடவடிக்கைகளில் ஏற்படும் இடையூறுகள் காரணமாக தொழில்துறை தொடர்ந்து குறிப்பிடத்தக்க தடைகளை எதிர்கொள்வதால், துறையின் ஏற்றுமதி வருவாய் மே 2022க்குள் 16% முதல் 2.2% வரை வளரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது குறித்து கருத்து தெரிவித்த JAAF பொதுச் செயலாளர் யொஹான் லோரன்ஸ், “2022ஆம் ஆண்டின் இறுதிக்குள் தொழில்துறையின் இலக்கான 6 பில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டுவோம் என்று நம்புகிறோம்.

எவ்வாறாயினும், முதலில் கடக்க வேண்டிய குறிப்பிடத்தக்க சவால்கள் உள்ளன என்பதை நாங்கள் நன்கு அறிவோம். எனவே, தொழில்துறையில் செயல்பாடுகளின் தொடர்ச்சிக்கு சாத்தியமான அனைத்து ஆதரவையும் வழங்குவது முக்கியம்.

“பெரிய ஆடை உற்பத்தியாளர்கள் தங்கள் உற்பத்தியைத் தக்கவைத்துக்கொள்வதை உறுதிசெய்வதைத் தவிர, அன்றாட நடவடிக்கைகளில் கடுமையான சவால்களை எதிர்கொள்ளும் தொழில்துறையின் முக்கியப் பிரிவான சிறிய மற்றும் நடுத்தர அளவிலான ஆடை உற்பத்தியாளர்களுக்கான ஆதரவிற்கு முன்னுரிமை அளிப்பது அவசியம். “ என அவர் தெரிவித்தார்.

நாடு தற்போது எதிர்கொள்ளும் முன்னெப்போதும் இல்லாத நிச்சயமற்ற நிலை, ஸ்திரமற்ற உலகளாவிய சந்தை நிலைமைகள் மற்றும் அதிகரித்து வரும் மூலப்பொருட்கள் மற்றும் உற்பத்திக்கான செலவுகள் போன்றவற்றுக்கு மத்தியிலும், இலங்கையின் ஆடைத் தொழில்துறையானது தேசிய பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளது.

தற்போதைய நெருக்கடிக்கு மத்தியிலும், ஏற்றுமதி செயல்திறனில் உள்ள உயர் போக்குகள், ஜூன் 2022 வரை ஆண்டுக்கு ஆண்டு 17% வளர்ச்சியைப் பதிவு செய்தல் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் (FDI) தொடர்ச்சியான வரவு காரணமாக இலங்கையில் ஆடைகள் தொடர்பான நேர்மறையான அணுகுமுறை இன்னும் நாட்டிற்குள் காணப்படுகின்றது. 94 மில்லியன் அமெரிக்க டொலர் ஆடை முதலீட்டில், 2022ஆம் ஆண்டில் ஆடைத் துறையின் விரிவாக்கத்திற்காக இதுவரை 73 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள முதலீடுகள் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# சாரதி அனுமதிப்பத்திரங்களின் காலாவதி திகதி நீட்டிக்கப்படும்

அண்மைக் காலமாக வழங்கப்பட்ட தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரங்களின் காலாவதித் திகதியை நீடிக்க நடவடிக்கை எடுப்பதாக போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (26) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

காலாவதித் திகதிகளை நீடிப்பதில் சில சட்ட சிக்கல்கள் உள்ளதாகவும், தாங்கள் சில பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாகவும், குறிப்பிட்ட நபர்களுக்கு தற்காலிக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். சட்டத் தடைகளை நீக்குவதற்கான அமைச்சரவை பத்திரத்தை உருவாக்குமாறு அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.



## அரச நிறுவனங்களுக்கான புதிய பிரதானிகள் நியமனம்

மஹேஸ்வரி விஜயனந்தன்

அரசாங்கத்தின் நான்கு முக்கிய நிறுவனங்களுக்கு புதிய பிரதானிகள் நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான பந்துல குணவர்தன தெரிவித்தார். அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (26) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்ட போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதற்கமைய,தேசிய வருமான திணைக்களத்தின் பணிப்பாளராக டி.ஆர். எஸ். ஹப்பு ஆராச்சியும் சுங்க திணைக்களத்தின் பணிப்பாளராக பி.பீ. எஸ்.சி. நோனிசும் நியமிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் அரசு திறைசேரியின் பிரதி செயலாளராக டபிள்யு.ஏ.சத்குமாரவும் தகவல் தொழில்நுட்ப முகாமை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக ஜூட் நிலுக்சனும் நியமிக்கப்பட்டுள்ளனர் என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். இந்த நியமனங்களுக்கான அமைச்சரவைப் பத்திரம் நிதியமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் முன்வைக்கப்படதாகவும் அமைச்சரைவை பேச்சாளர் தெரிவித்தார்.

# டீசலுக்கே முக்கியத்துவம் வழங்க வேண்டும்

அமைச்சர் காஞ்சன விஜேசேகரவுக்கு நடைமுறை அறிவு இல்லை என தெரிவித்துள்ள தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன, டீசல் லீற்றரின் விலையை 220 ரூபாயாகக் குறைத்தால் பஸ் கட்டணங்களும் பாதியாகக் குறையும் எனவும் தெரிவித்தார்.

முன்பிருந்த ஆரம்ப பஸ் கட்டணம் மூன்று மடங்காக அதிகரித்துள்ளது. அதேபோல் எரிபொருளின் விலையும் மூன்று மடங்காக அதிகரித்துள்ளது. அரசாங்கம் எமக்கு நிவாரணங்களை வழங்கும் காலம் போய் தற்போது அரசாங்கத்துக்கு நாம் நிவாரணங்களை வழங்க வேண்டிய நிலையே



ஏற்பட்டுள்ளது எனவும் கூறினார்.

டீசல் லீற்றரின் விலையை 220 ரூபாய்க்கு அரசாங்கம் எமக்கு வழங்குமாக இருந்தால், பஸ் கட்டணங்களைப் பாதியாகக் குறைக்க முடியும் எனவும், இதன்படி குறைந்த பஸ் கட்டணம் 20 ரூபாயாக குறைக்க முடியும். எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவுக்கு நடைமுறை அறிவு இதுவரையில் வரவில்லை எனவும் சாடினார்.

அமைச்சர் காஞ்சன விஜேசேகரவுடனான கலந்துரையாடல்களின் போது நாம் இதனை அவதானித்தோம். அவர் எங்கோ சென்று சிக்கப்போகிறார். டீசலுக்கு அதிளவான முக்கியத்துவமளித்து அவற்றை விநியோகிக்க வேண்டும். பெற்றோலுக்கு இரண்டாவது இடங்கொடுத்தாலும் பரவாயில்லை. இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான டிப்போக்களில் பஸ்களுக்கான டீசல் விநியோகிக்கப்பட்டாலும் போதுமான அளவு அவை வழங்கப்படுவதில்லை எனவும் கூறினார்.

## யாழ். பல்கலை

# கலைப்பீடத்தின் ‘மானுடம் 2022’

## சர்வதேச ஆய்வு மாநாடு

எம்.றொசாந்த், வி.நிதர்ஷன்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடம் நடத்தும் ‘மானுடம் 2022’ சர்வதேச ஆய்வு மாநாடு, எதிர்வரும் 29, 30ஆம் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடம்பெறவுள்ளது. ‘மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளின் நூற்றாண்டு: தொடர்ச்சிகள்,விலகல்கள், செல்நெறிகள்’ எனும் கருப்பொருளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சர்வதேச ஆய்வு மாநாட்டுத் தொடரின் ஒருபகுதியாகக் கலைப்பீடம் இந்த மாநாட்டை ஒழுங்கமைத்துள்ளது.

இது தொடர்பாக, ‘மானுடம் 2022’ சர்வதேச ஆய்வு மாநாட்டின் அமைப்புக்குழு விடுத்துள்ள ஊடக அறிக்கையில், ‘புரட்சிகரமான திறவுகள் மற்றும் நெருக்கடிமிக்க சவால்களை உள்ளடக்கிய இந்த நூற்றாண்டுகால வரலாற்றை மீட்டுப் பார்த்து, அதனை விசாரணை செய்யும் செயன்முறைகளின் ஒரு பகுதியாகவும், மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளின் தற்போதைய நிலைமையை இந்த வரலாற்றின் வெளிச்சத்தில் இருந்து அணுகுவதற்கும், விளங்குவதற்குமான ஒரு முயற்சியாகவும் இந்தச் சர்வதேச

**“ நெருக்கடிமிக்க சவால்களை உள்ளடக்கிய இந்த நூற்றாண்டுகால வரலாற்றை மீட்டுப் பார்த்து, அதனை விசாரணை செய்யும் செயன்முறைகளின் ஒரு பகுதியாகவும் மனிதப் பண்பியல், சமூக விஞ்ஞானக் கற்கைகளின் நிலைமையை இந்த வரலாற்றின் வெளிச்சத்தில் இருந்து அணுகுவதற்கு ஒரு முயற்சியாகவும் இந்த ஆய்வு மாநாடு அமையும்**

ஆய்வு மாநாடு அமையும்’ எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை (29) மாலை 3.30 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் ஆரம்பமாகும் தொடக்க நிகழ்வுக்கு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். மாநாட்டின் பிரதான ஒழுங்கமைப்பாளர் கலாநிதி ரி.சனாதனன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், கலைப்பீடப் பீடாதிபதி பேராசிரியர் கே. சுதாகர், ஆய்வு மாநாட்டின் பிரதம ஆசிரியர் கலாநிதி எம். திருவரங்கன் ஆகியோரும் கலந்துகொள்கின்றனர்.

# பிரதமரை சந்தித்தார் இந்திய உயர்ஸ்தானிகர்

## இருநாட்டு முதலீட்டு ஊக்குவிப்பு குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, புதிய பிரதமர் தினேஷ் குணவர்தனவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இதன்போது இலங்கை -இந்திய ஒத்துழைப்பு செயற்பாடுகள் மற்றும் முதலீடுகள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

புதிய பிரதமர் தினேஷ் குணவர்தன நேற்று முன்தினம் கடமைகளை ஏற்றிருந்த நிலையில் நேற்று (26) இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே அவரை சந்தித்திருந்தார். நடைமுறை சார்ந்த உத்தியோகபூர்வ சந்திப்பாக இது அமைந்திருந்த போதிலும் கூட, சில முக்கிய விடயங்கள் குறித்து இருவரும் கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது, இரு நாடுகளுக்கும் இடையிலான நேரடி வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் சுற்றுலாத் துறையில் விரைவான முதலீடுகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

நாட்டில் புதுப்பிக்கத்தக்க சக்தி மற்றும் தொடருந்து உள்ளிட்ட போக்குவரத்து கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு தேவையான தொழில்நுட்ப ஆதரவை வழங்க இந்திய உயர்ஸ்தானிகர் ஒப்புக்கொண்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பொலிஸார் தலையீடு; எரிபொருள்

# பங்கீட்டில் முரண்பாடு

## பிரதேச செயலக அதிகாரிகள் இடைநடுவே வெளியேறினர்

■ வ.சக்தி

மட்டக்களப்பு, மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்துக்குட்பட்ட களுவாஞ்சிகுடியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று முன்தினம் (25) எரிபொருள் விநியோகிக்கப்பட்டது.

இதன்போது பிரதேச செயலகத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட 'குடும்ப விநியோக அட்டை'யின் பிரகாரம் எரிபொருள் பெறுவதற்கு வருகை தந்திருந்தவர்களை பிரதேச செயலக அதிகாரிகள் பதிவு செய்தனர்.

இவ்வாறு குடும்ப அட்டையின் பிரகாரம் ஒவ்வொருவருக்கும் சுமூகமாக எரிபொருள் வழங்கப்பட்டுக் கொண்டிருந்தபோது, இடைநடுவே பொலிஸார் தலையீடு செய்தனர்.



இதனால் தம்மால் தொடர்ந்து மேற்குறித்த நடைமுறையின்கீழ் மக்களுக்கு எரிபொருள் வழங்குவதற்குரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியாமல் போனதாகவும், அங்கிருந்த பாதுகாப்புத் தரப்பினரால் அரச உத்தியோகத்தர்கள் அச்சுறுத்தல்களுக்கு உட்பட்ட காரணத்தாலும், அங்கு கடமையிலிருந்து இடைநடுவே வெளியேறியதாக பிரதேச செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

எரிபொருள் யாவருக்கும் வழங்க வேண்டும். குறிப்பாக, தூர இடங்களிலிருந்து வருபவர்கள், குடும்ப அட்டை வைத்திருக்கமாட்டார்கள். எனினும், அவர்களுக்கும் எரிபொருள் வழங்க வேண்டும். எனவே, தாம் அனைவருக்கும் சீராக எரிபொருள் வழங்குவதற்குரிய கடமைகளை முன்னெடுத்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

எது எவ்வாறாயினும், சிலர் செல்வாக்கைப் பயன்படுத்தி முறைகேடாக தங்களுடைய வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்பிச் சென்றதால், நாள் கணக்கில் வரிசையில் காத்திருக்கும் மக்கள் எரிபொருள் இன்றி திருப்பியதாக கவலை தெரிவித்தனர்.

நல்லூர் மகோற்சவ காலத்தில்

# பின்பற்றவேண்டிய விதிமுறைகள்

■ எம்.றொசாந்த், வி.நிதர்ஷன்

நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வருடாந்த திருவிழா எதிர்வரும் 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில், அதனுடைய ஏற்பாடுகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பாக யாழ். மாநகர சபையால் விளக்கமளிக்கப்பட்டது.

மஹோற்சவ ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல், யாழ். மாநகர சபையில் நேற்று (26) இடம்பெற்றது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் கொரோனா தொற்று காரணமாக, கடந்த மூன்று வருடங்களாக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இடம்பெற்ற நல்லூர் மஹோற்சவம், வழமைபோன்று அதாவது 2018ஆம் ஆண்டுக்கு முன்பு எவ்வாறு உற்சவம் நடந்ததோ அதேபோல இம்முறை இடம்பெறுமென யாழ். மாநகர மேயர் மணிவண்ணன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "ஓகஸ்ட் 1ஆம் திகதி காலையில் இருந்து நல்லூர் கோவில் சுற்றுவீதிகளில் போக்குவரத்துத் தடை செய்யப்பட்டு, ஓகஸ்ட் 29 ஆம் திகதி வைரவர் சாந்தி நிறைவடைந்த பின்னரே திறந்து விடப்படும்.




"கோவில் வெளி வீதியைச் சூழ கோவில் நிர்வாகத்தினரால் சிவப்பு, வெள்ளை வர்ணக் கொடிகளால் எல்லையிடப்படும் வீதித்தடை பகுதிகளினுள் மாநகர சபையின் நீர் விநியோக வண்டி மற்றும் கழிவகற்றும் வண்டியை தவிர எக்காரணம் கொண்டும் வாகனங்கள் உட் செல்ல முடியாது.

"அதேபோல வெள்ளை வர்ணக் கொடிகளால் எல்லையிடப்படும் வீதித்தடை பகுதிகளினுள் எந்தவிதமான வியாபார நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாது. அத்துடன், ட்ரோன் கமெராக்களை பயன்படுத்தி, காணொளி பதிவு செய்ய முடியாது.

"காலணிகளுடன் கோவில் வளாகத்திற்குள் பிரவேசிக்க முடியாது. ஆலயத்துக்கு நேர்த்திக்கடன்களைக் நிறைவேற்ற வருகின்ற தூக்குகாவடிகள் அனைத்தும் கோவிலின் முன்பக்க பருத்தித்துறை வீதி வழியாக மட்டுமே உள்நுழைய முடியும்.

"அவ்வாறு வருகின்ற காவடிகள் இறக்கப்பட்டதும், வாகனங்கள் அனைத்தும், செட்டித்தெரு வீதி வழியாக வெளியேறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

"வீதி மூடப்பட்டிருக்கும் சமயங்களில் பருத்தித்துறை வீதி வழியாக வரும் வாகனங்கள், யாழ். மாநகர சபைக்கு முன்பாக உள்ள வீதியால் பயணித்து, யாழ் நகரை அடைய முடியும். ஆனால், இரதோற்சவம் மற்றும் சப்பர திருவிழாக்களின் போது, கச்சேரி - நல்லூர் வீதியாலேயே பயணிக்க முடியும்.

"முகக்கவசங்களை அணிவது சட்டமாக்கப்படவில்லை. இருந்த போதும் கொரோனா எச்சரிக்கை காணப்படுவதால் முகக்கவசங்களை அணிந்து தன்னெழுச்சியாக சுகாதார விதிமுறைகளை பக்தர்கள் பின்பற்றவேண்டும்.

"திருட்டுகளை தவிர்க்க, நல்லூர் கோவில் சூழலில் யாழ். மாநகர சபையினால் கண்காணிப்புக் கமெராக்கள் பொருத்தப்படும்" என்றார்.

உருக்குலைந்த நிலையில்

# ஆணின் சடலம் மீட்பு



■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு, கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள இலப்படிச்சேனை காட்டுப்பகுதியில் உருக்குலைந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம், நேற்று முன்தினம் (25) இரவு மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காட்டுக்கு விறகு வெட்டச் சென்றவர்கள், அங்கு சடலம் ஒன்று இருப்பதாக பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து, சடலத்தை மீட்டு, பிரேத பரிசோதனைக்காக செங்கலடி வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனவும் 10 நாள்களுக்கு முன் உயிரிழந்திருக்கலாம் எனவும் தெரிவித்த கரடியனாறு பொலிஸார், குறித்த சடலம் தொடர்பாக அடையாளம் தெரிந்தவர்கள் பொலிஸாருக்கு அறிவிக்குமாறும் கேட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆல மரத்தில் சடலம் மீட்பு

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிலுள்ள மகிழடித்தீவு பிரதேசத்தில் காளி கோவில் ஆல மரத்தில் இருந்து ஆண் ஒருவரின் சடலம், நேற்று முன்தினம் (25) மீட்கப்பட்டுள்ளதாக கொக்கட்டிச்சோலை பொலிஸார் தெரிவித்தனர்.



மகிழடித்தீவு பாடசாலை வீதியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான 37 வயதுடைய குமாரசாமி திலகேஸ்வரன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குடும்பப் பிரச்சினை காரணமாக, சம்பவத்துக்கு முதல் நாள் ஞாயிற்றுக்கிழமை இரவு வீட்டின் கிணற்றில் குதித்து உயிரை மாய்த்துக்கொள்ள முயன்ற குறித்த நபர் காப்பாற்றப்பட்டார்.

இதனை தொடர்ந்து சம்பவதினமான மறுநாள் அதிகாலை அவரது மனைவி ஆடை தொழிற்சாலைக்கு வேலைக்கு செல்ல எழுந்து கணவரை தேடிய போது அவரை வீட்டில் காணவில்லை. எனவே, அவர் அருகில் சென்றிருக்கலாம் என நினைத்து அவர் வேலைக்குச் சென்றுள்ளார்.

இந்த நிலையில் 8.30 மணிக்கு அந்த பகுதியிலுள்ள காளி கோவில் மூலஸ்தானப் பகுதியிலுள்ள ஆல மரத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் அவர் சடலமாக மீட்கப்பட்டார்.

நீதிமன்ற உத்தரவுக்கமைய, பிரேத பரிசோதனைக்காக மட்டு. போதனா வைத்தியசாலையில் சடலத்தை ஒப்படைத்துள்ளதாக கொக்கட்டிச்சோலை பொலிஸார் தெரிவித்தனர்.


# கிளிநொச்சியில் 82 போத்தல்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி, தர்மபுரம் பகுதியில் 82 போத்தல் கசிப்புடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இராணுவத்தினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது, 82 போத்தல் கசிப்பு மற்றும் 238 லிட்டர் கோடாவும் மீட்கப்பட்டன.





அத்துடன், கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்களும் உள்ளூர் இடியன் துப்பாக்கி ஒன்றும் மீட்கப்பட்டமையால் அவற்றை வைத்திருந்த குற்றச்சாட்டில், சந்தேக நபரொருவர், இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு, தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக தருமபுர பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

யாழில்

# வழமைக்கு திரும்பிய பஸ் சேவைகள்

■ வி.நிதர்ஷன்

யாழ்ப்பாணத்தில் இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ். சாலை பணியாளர்கள் முன்னெடுத்த பணிப் புறக்கணிப்புப் போராட்டம், நேற்று (26) கைவிடப்பட்டது.

அதேவேளை, யாழ். மாவட்டத்தில் தனியார் பஸ்கள், நேற்று முதல் 50 சதவீதமளவில் இயங்குமென யாழ். மாவட்ட பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பேருந்து நிறுவனங்களின் இணையத்தின் தலைவர் பொ.கெங்காதாரன் தெரிவித்தார்.


இதற்கமைய யாழ்ப்பாணத்தில் பஸ்கள் சேவையில் ஈடுபடுமென அறிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் கடந்த இரு தினங்களாக இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பஸ் ஊழியர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# இடி, மின்னலால் வீடுகளுக்கு சேதம்

■ ஜவ்பர்கான், எம்.எஸ்.எம்.நூர்தீன்



வாழைச்சேனையில் நேற்று முன்தினம் (25) பிற்பகல் வேளையில் ஏற்பட்ட இடி, மின்னல் தாக்கம் காரணமாக பிரதேசத்தின் பல வீடுகளுக்கு சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், வீடுகளிலிருந்த மின்சாரப் பொருட்களும் சேதமாகியுள்ளன.

வாழைச்சேனை, விநாயகபுரத்தில் இரு வீடுகளில் தென்னை மரங்களில் இடி, மின்னல் தாக்கம் ஏற்பட்டதால் தீப்பற்றியுள்ளது. வீட்டின் கூரையின் மீது தீ பரவியதையடுத்து அயலவர்கள் தீயை கட்டுப்படுத்தினர்.

குறித்த வீடுகளில் வசித்தோர், உறவினர்களின் வீடுகளுக்கு சென்றிருந்ததால் உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படாமல் தடுக்கப்பட்டுள்ளது.

ஆனால், அப்பிரதேசத்தின் பல வீடுகளில் பாவனையில் இருந்த மின் பாவனைப் பொருட்கள் பல சேதமடைந்துள்ளதாக பிரதேச மக்கள் கவலை தெரிவித்தனர்.

# ரூ.9 இலட்சம் பெறுமதியான வீட்டு உபகரணங்கள் திருட்டு

## எண்மர் கைது

■ எப்.முபாரக்

திருகோணமலை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஒன்பது இலட்சம் ரூபாய் பெறுமதியான வீட்டு உபகராணங்களை திருடிய குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் (25) இரவு 08 பேரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை மற்றும் பாலையூற்று பகுதியைச் சேர்ந்த 25 வயதிலிருந்து 45 வயதுக்குட்பட்ட எட்டுப் பேரையே கைது செய்துள்ளதாக திருகோணமலை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை பகுதியுள்ள வீடொன்றை உடைத்து அங்கிருந்த மின்விசிறி, தையல் இயந்திரம், ஒலி பெருக்கி சாதனங்கள், இசைக்கருவி, மின்னழுத்தி போன்ற உபகரணங்களை திருடி, சந்தேகநபர்கள் விற்பனை செய்துள்ளதாக, ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.



சந்தேகநபர்களை தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு, திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த உள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

பெற்றோல் இல்லை;

# புதுக்குடியிருப்பு மக்களுக்கு தொடர்ந்தும் ஏமாற்றம்

■ செ.கீதாஞ்சன்

புதுக்குடியிருப்பு எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் நேற்று முன்தினம் (25) முதல் எரிபொருள் வழங்கப்பட்டது.

மக்கள் நீண்ட வரிசையில் நின்று, பெற்றோலை பெற்றுக்கொண்ட நிலையில், நேற்று (26) இன்று காலை 7.30 மணிக்கு திடீரென பெற்றோல் முடிவடைந்து விட்டதாக தெரிவித்தமையால் இரவிரவாக காத்திருந்த பொதுமக்கள் பலர் ஏமாற்றமடைந்தனர்.

பின்னர் பொலிஸ் அதிகாரியின் தலையீட்டால் 100 மோட்டார் சைக்கிள்களுக்கு 1 லீற்றர் படி வழங்குமாறு, பொலிஸ் அதிகாரி கூறிய பின் மீண்டும் வழங்கியுள்ளார்கள்.

புதுக்குடியிருப்பு எரிபொருள் நிரப்பு நிலையத்தின் இந்தச் செயற்பாட்டால் மக்கள் விசனம் அடைந்துள்ளார்கள்.

நீண்ட நேரம் இரவிரவாக காத்திருந்த மக்களுக்கு எரிபொருள் முடிந்து விட்டது என்று சொல்லி, மக்களை அலைக்களிக்கும் நடவடிக்கையில் எரிபொருள் நிரப்பு நிலைய நிர்வாகத்தினரின் செயற்பாடு காணப்படுவதாக மக்கள் குற்றம் சாட்டியுள்ளார்கள்.



வவுனியா நகர சபைக்கு

# புதிய உறுப்பினர் நியமனம்

■ க.அகரன்

வவுனியா நகர சபையின் புதிய உறுப்பினராக நடராசா கருணாநிதி நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு, தேர்தல்கள் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

வைரவபுளியங்குளம் வட்டாரத்தில் போட்டியிட்டு நகர சபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட நா. சேனாதிராஜா, அண்மையில் தனது பதவியை இராஜினாமா செய்தமையையடுத்து, அவரது இடத்துக்கு ந.கருணாநிதியின் பெயர் கட்சியின் பொதுச் செயலாளரால் தேர்தல்கள் திணைக்களத்துக்கு சிபார்சு செய்யப்பட்டது.

கட்சித் தலைமையின் வேண்டுகோளுக்கமைய, வட்டாரங்களில் பொதுப் பட்டியலில் போட்டியிட்டவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கும் வகையில் ஏற்கெனவே வவுனியா நகர வட்டாரத்தின் உறுப்பினர் ரி.கே. ராஜலிங்கம் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளதுடன், அவரது இடத்துக்கு பொதுப்பட்டியல் உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா, பூந்தோட்டத்தில் வதியும் நடராசா கருணாநிதி, இலங்கை தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் ஆவார்.

பெருந்தோட்ட பகுதிகளில் புதிய உற்பத்தி முறை

# முரண்பாடுகளை தோற்றுவித்துள்ளன

## பேராசிரியர் விஜயசந்திரன் தெரிவிப்பு

■ மலைவாஞ்ஞன்

பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகளால் உள்ளூர் உற்பத்தி முறை என அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய உற்பத்தி முறை, பெருந்தோட்டப் பகுதியில் பல்வேறு முரண்பாடுகளை தோற்றுவித்துள்ளதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் விஜயசந்திரன் தெரிவித்தார்.

பிரிடோ நிறுவனத்தின் வேண்டுகோளுக்கமைய பேராசிரியர் விஜயசந்திரன், பேராசிரியர் சந்திரபோஸ் ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு தொடர்பான கலந்துரையாடல் டிக்கோயா நகர மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், குறித்த வெளியார் உற்பத்தி முறையென்பது கருத்தியல் அடிப்படையில் வேறுபட்டதாகவும் உள்ளூர் உற்பத்தியின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுகின்றது. இந்த முறை ஒரு முறையாக சட்டரீதியாக மேற்கொள்ளப்படவில்லை. முழுமைப்படுத்தப்பட்ட ஒரு முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளமையும், வெவ்வேறு தோட்டங்களில் வெவ்வேறு முறைகளில் கையாள்வதும் பாரிய முரண்பாடாக காணப்படுகின்றன.



இதற்கென்று ஒரு சட்டவரையறையில்லை.

கொடுக்கப்படுகின்ற ஒப்பந்த காலமும் மிகவும் குறைவானது. வேண்டிய நேரத்தில் ஒப்பந்தத்தை இரத்தச் செய்யக்கூடிய நிலையும் காணப்படுகின்றது. அவர்களின் உற்பத்திக்கு கொடுக்கப்படுகின்ற விலைகள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன.

ஆகவே பெருந்தோட்ட சமூகத்தின் நீண்ட கால தீர்வாக தேயிலை சிற்றுடைமை முறைமையினை அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

அதில் ஆகக்குறைந்தது இரண்டு ஏக்கர் காணியில் உள்ள தேயிலை தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளித்து சிறு விவசாயிகளாக மாற்றுவது மிகவும் பொருத்தமானது.

சிற்றுடைமையாக்குவதற்கு காலம் எடுக்கும் பட்சத்தில் தற்போது உள்ள முறைமையினை முத்தரப்பாகிய அரசாங்கம், தொழிற்சங்கம், கம்பனிகள் இணைந்து மேற்கொள்ள வேண்டும். அதில் ஐந்து அல்லது பத்து வருடம் ஒப்பந்த காலம் காணப்பட வேண்டும்.

விலை தீர்மானிக்கின்ற உரிமை காணிகளை விருத்தி செய்த பின் தோட்ட கம்பனிகள் உடன் மீள பெற முடியாத வரையறைகள் காணப்பட வேண்டும். தற்போது இருக்கின்ற 1,500 என்ற தேயிலை மரங்களுக்கு பதிலாக நில அடிப்படையில் வழங்குதல் வேண்டும். அத்தோடு உற்பத்தி நிலத்தினை தவிர இவர்களுக்கு வாழ்விடத்தை அமைத்து கொள்வதற்கான வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.

வீதியில் சென்றவரை மோதி விட்டு

## தப்பிச் சென்ற வாகனம்

■ என்.ஆராச்சி

தெரணியகல- தெஹியோவிட்ட வீதியின் மகுலுவாதென்ன பிரதேசத்தில் வாகனம் மோதி நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தெரணியகல- இலுக்குவத்தையைச் சேர்ந்த 32 வயதுடைய முத்து யோகநாதன் என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் நேற்று முன்தினம் (25) இரவு வீதியில் நடந்துசென்று கொண்டிருந்த போது வாகனம் ஒன்று மோதி விட்டு தப்பிச் சென்றுள்ளதாக தெஹியோவிட்ட பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பில் வீதியில் நடந்து சென்ற மற்றொரு நபர், பொலிஸாருக்கு அறிவித்துள்ளதுடன், சடலம் அவிசாவளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

மேலும் இந்த விபத்தை ஏற்படுத்தி விட்டு தப்பிச் சென்ற வாகனம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## விருதை வென்றார் பத்தும் மஹாகம

■ பி.கேதீஸ்



அண்மையில் இந்தியாவில் நடத்தப்பட்ட சர்வதேச ரீதியிலான" INDIE SHORTS FILM 2022 குறும்படப் போட்டியில் இலங்கை சார்பில் கலந்து கொண்ட நுவரெலியாவைச் சேர்ந்த பத்தும் மஹாகம சிறந்த நடிகருக்கான விருதை வென்றார்.

சச்சின் செந்தில்குமாரன் மற்றும் பத்தும் மஹாகம இணைந்து இயக்கிய "முகம்" என்ற குறும்படத்தில் நடித்தற்காக அவர் இந்த விருதை வென்றிருப்பது இலங்கை குறும்படத்துறைக்கும் வளர்ந்து வரும் கலைஞருக்கும் கிடைத்த கௌரவமாகும்.

பத்தும் மஹாகம எழுதிய 10 நிமிட குறும்படத்தில் உரையாடல் இல்லை என்பதும் சிறப்பு அம்சமாகும். ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வர்த்தக பீடத்தின் இறுதி வருட மாணவரான பத்தும், நுவரெலியாவைச் சேர்ந்த வர்த்தகரும் ஊடகவியலாளருமான சந்திரசிறி மஹாகமவின் மகனாவார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



## திறன் வகுப்பறைகள் திறந்து வைக்கப்பட்டன

■ மெய்யன்

வன்னி ஹோப் அவுஸ்ரலியா நிறுவனத்தினால் கண்டி மாவட்டத்திலுள்ள இரு பெருந்தோட்ட பாடசாலைகளுக்கு திறன் வகுப்பறைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

நல்லையா கல்வி நிதியம் மற்றும் ஐக்கிய இராஜியத்தில் இயங்கும் இரட்ணம் பவுன்டேஷன் ஆகிய நிறுவனங்களின் நிதிப் பங்களிப்புடன் வன்னி ஹோப் நிறுவனத்தின் நிதி ஏற்பாட்டில் பிறைட் சமூக அபிவிருத்தி அறக்கட்டளையால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வு நேற்று (26) வன்னி ஹோப் நிறுவன தலைவர் ரஞ்சன் சிவஞான சுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

இதற்கமைய, கண்டி கல்வி வலயத்திற்குட்பட்ட திருவள்ளுவர் தமிழ் வித்தியாலயம், வத்தேகமை கல்வி வலயத்திற்குட்பட்ட பரமேஸ்வரா தமிழ் வித்தியாலயம் ஆகிய இரு பின்தங்கிய பாடசாலைகளுக்கு தலா ஏழு இலட்சம் பெறுமதி கொண்ட திறன் வகுப்பறைகள் வழங்கி வைக்கப்பட்டன.



## ஆர்ப்பாட்டம்...



தனியார் பஸ்களுக்கு டீசலைப் பெற்றுத் தரக்கோரி, பதுளை – ஊவா மாகாண சபைக்கு முன்பாக நேற்று (26) பிரதான பாதை மறிக்கப்பட்டு ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

(எம். செல்வராஜா)

சப்ரகமுவ மாகாண

## தமிழ்மொழி விழா இணையவழியில்

■ ரா.கமல்

சப்ரகமுவ மாகாண கல்வித்திணைக்களம் இணையவழியில் தமிழ்மொழித்தின விழாவினை நடாத்த திட்டமிட்டுள்ளது.

இவ்விழாவானது, எதிர்வரும் 29ஆம் திகதி இணைய வழியில் இடம்பெறவுள்ளது. அன்றையத்தினம் காலை 9.00மணிக்கு இடம்பெறவுள்ள இந்திகழ்வினை wenenapiyasa.lk எனும் இணையத் தளத்தில் நேரிடையாக பார்வையிடலாம்.

சப்ரகமுவ மாகாணத்தில் காணப்படும் ஏழு வலயங்களை சேர்ந்த பாடசாலைகள் இந்நிகழ்நிலை விழாவில் கலந்துக்கொள்கின்றன. இதன்போது பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. மாகாண கல்விப்பணிப்பாளர் திரு. குரூப் ஆராச்சியின் தலைமையிலும் உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி சகுந்தலா மனோகரனின் நெறிப்படுத்தலிலும் மாகாண இ- நெனபியச தொழில்நுட்ப குழுமத்தின் முழுமையான ஒத்துழைப்புடன் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

கொட்டும் மழையிலும்

## மஸ்கெலியாவில் தொடரும் எரிவாயு வரிசை

■ செ.தி. பெருமாள்

லிட்ரோ சமையல் எரிவாய விநியோகம் நாடளாவிய ரீதியில் வழமைப்போல் இடம்பெற்று வரும் நிலையில், மஸ்கெலியா பிரதேச மக்கள் சமையல் எரிவாயு கிடைக்காமல் வரிசைகளில் காத்திருக்கின்றனர்.

இதற்கமைய, நேற்றுமுன்தினம் (25) மாலை 6 மணி முதல் மஸ்கெலியா நகரில் உள்ள எரிவாயு விற்பனை நிலையங்களில் சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள்

இரவு முழுவதும் கொட்டும் மழையில் நனைந்தவாறு எரிவாயுக்காக காத்திருந்தனர்.

இரவு பத்து மணி வரை காத்திருந்த போதும் வரும் என தெரிவிக்கப்பட்ட எரிவாயு கிடைக்கவில்லை என மக்கள் தெரிவித்தனர்.

மஸ்கெலியா நகரில் நான்கு இடங்களில் சமையல் எரிவாயு விற்பனை நிலையங்கள் காணப்படும் நிலையில், மக்களுக்கு முறையாக எரிவாயு வழங்கப்படுவதில்லை.

மேலும் ஹோட்டல்களில் அதிகளவில் எரிவாயு கொள்வனவு செய்வதால் நுகர்வோருக்கு எரிவாயு கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவணம் செலுத்தி இப்பகுதியில் எரிவாயு வழங்கும் போது, ஹோட்டல்களுக்கு தனியாக வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என நுகர்வோர் கோரிக்கை விடுக்கின்றனர்.

எரிபொருள் நிரப்பு நிலையத்தில்

## பற்றி எரிந்த மோட்டார் சைக்கிள்

■ நிலமேகம் பிரசாந்த்

பூண்டுலோயா பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட எரிபொருள் நிலையத்தில் திடிரென மோட்டார் சைக்கிளொன்று தீப்பற்றி எரிந்த சம்பவமொன்று பதிவாகியது.

குறித்த எரிபொருள் நிலையத்தில் மோட்டார் சைக்கிள் பெற்றோலை நிரப்பிக்கொண்டு செல்ல முற்படும் போது திடிரென தீப்பற்றி கொண்டது.

இதனையடுத்து பூண்டுலோயா பொலிஸார் மற்றும் எரிபொருள் நிலைய ஊழியர்கள் தீயணைப்பு கருவிகளின் ஊடாக தீயை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளனர்.



36 குடும்பங்களுக்கான

## மின்சாரம் துண்டிப்பு

■ துவாரகஷான்

அக்கரப்பத்தனை - லோவர் கிரன்லி தோட்டத்தில் 36 குடும்பங்களுக்கான மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

தோட்ட நிர்வாகத்தால் தேயிலை தொழிற்சாலைக்கு விறகுக்காக பாரிய மரம் ஒன்று தரிக்கப்பட்ட போது, மரம் முறிந்து மின்சார தூண்கள் மீது விழுந்ததால் 36 குடியிருப்புக்கான மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் (25) மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.



இதனால் 12 மின் கம்பங்கள் முறிந்து விழுந்துள்ளதுடன், வீடுகளின் மீது தூண்கள் விழுந்ததன் காரணமாக வீடுகளும் பகுதி அளவில் சேதமாகி உள்ளன.

இதனால் 36 குடும்பங்களைச் சேர்ந்த 150 இற்கு மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தோட்ட நிர்வாக அதிகாரிகள் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உடனடியாக மின்சாரத்தினை பெற்றுக் கொடுக்கும் வகையில் ஜெனரேட்டர் மூலம் மின்சாரம் வழங்கியதுடன், மின்சார சபை அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து, சம்பவ இடத்திற்கு வருகை தந்த அதிகாரிகள், சேதமாகிய தூண்களை அப்புறப்படுத்தி இரண்டு நாட்களில் சகல வீடுகளுக்கும் மின்சாரம் வழங்கப்படும் என தெரிவித்துள்ளனர்.

காட்டு மாரியம்மன் ஆலய நிர்வாக சபை

## கூட்டத்தில் அமைதியின்மை

### மறு அறிவித்தல் வரை ஒத்தி வைக்கப்பட்டது

■ எஸ்.கணேசன்

பத்தனை- டெவன் தோட்ட காட்டு மாரியம்மன் ஆலயத்தின் புதிய நிர்வாக சபை கூட்டத்தில் எழுந்த சர்ச்சைகளால் மறு அறிவித்தல் வரை தெரிவுக் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் நூறு வருடங்களுக்கு மேல் பழமை வாய்ந்த மேற்படி ஆலயத்திற்கு, முதற் தடவையாக உத்தியோகபூர்வமான நிர்வாக சபையை தெரிவு செய்யும்படி மாவட்ட செயலாளரின் உத்தரவுக்கமைய நேற்றுமுன்தினம் (25) திங்கட்கிழமை 2 மணியளவில் பத்தனை ஸ்ரீ சிவசுப்ரமணிய ஆலய மண்டபத்தில் மேற்படி கூட்டத்துக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம அலுவலர் மற்றும் திம்புள்ள பத்தனை பொலிஸ் நிலைய அதிகாரி ஒருவரும் கலந்து கொண்டிருந்தனர்.

புதிய நிர்வாக சபையை தெரிவு செய்வதற்காக கிரேக்கிலி, பெய்த்லி, பொரஸ்ட்கிறிக், டெவன் ஆகிய தோட்டப்பிரிவு மக்களும் பத்தனை நகர் மற்றும் பத்தனை கொலனி பிரதேச மக்களும் கலந்து கொண்டிருந்தனர்.

கூட்டம் ஆரம்பிப்பதற்கு தயாரான நிலையில், டெவன் தோட்டத்திலிருந்து வருகை தந்தோர் இந்த ஆலயம் தமது தோட்டத்துக்கு உரியது என்றும் ஏற்கனவே இந்த ஆலயத்துக்கு தமது தோட்டத்தில் நிர்வாக சபை உள்ளது என்றும் புதிதாக வெளியிலிருந்து இனந்தெரியாதோர் ஏன் ஒரு நிர்வாக சபையை உருவாக்க வேண்டும் என்று கேள்வி எழுப்பியதோடு யார் இதற்கு அனுமதி வழங்கினர் என கேள்வியெழுப்பினர். இதன்போது இந்த கூட்டத்தில் ஒரு அமைதியின்மை ஏற்பட்டிருந்தது.

மேலும் இது டெவன் பிரதேசத்துக்கு உரியது என்பதாலேயே அந்த தோட்டத்தில் உள்ளவர்கள் பரம்பரையாக இங்கு பூஜை செய்து வருவதாக சுட்டிக்காட்டிய அவர்கள் அதற்குரிய ஆவணங்கள் தம்மிடம் உள்ளன என்று தெரிவித்தனர்.



இதையடுத்து ஏனைய பிரிவு மக்களில் சிலரும் அவர்களோடு வாக்குவாதப்பட, அங்கு வருகை தந்திருந்த அதிகாரிகள் இது குறித்து தாம் மாவட்ட செயலாளருடன் பேச்சு நடத்தி நிர்வாக சபையை தெரிவு செய்வது குறித்து அறிவிப்பதாக தெரிவித்ததையடுத்து கூட்டம் இடம்பெறாமலேயே அனைவரும் கலைந்து சென்றனர்.

மேற்படி ஆலயத்துக்கு செல்லும் நுழைவாயிலுக்கு அருகில் அமைந்திருக்கும் சர்ச்சைக்குரிய கடைத்தொகுதி யாரால் அமைக்கப்பட்டது என்று கடந்த திங்கட்கிழமை பிரதேச மக்கள் கவனஈர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

## எரிபொருள் வரிசையில் மற்றுமொரு மரணம்

■ ரவீந்திரவிராஜ்

கடந்த 2 நாட்களாக எரிபொருள் வரிசையில் நின்ற ஒருவர் உயிரிழந்துள்ளார் என மாத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தளை- கிவுல பண்டரபொல பகுதியைச் சேர்ந்த 63 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மாத்தளை பழைய பொலிஸ் நிலையத்துக்கு அருகிலுள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் இரண்டு நாட்களாக காத்திருந்த குறித்த முதியவர் நேற்று முன்தினம் (25) உயிரிழந்தள்ளார்.

# மீண்டுமொரு முடக்கத்துக்கு வழிசமைத்து விடாதீர்கள்

ஊர்களில் சாரைப்பாம்பு கண்களில் தென்பட்டுவிட்டால், மண்ணெண்ணெயை ஊற்றி, அதனை அடித்தே கொன்றுவிடுவர். கையில் கிடத்தவற்றை எல்லாம் எடுத்து, இறந்தபின்பும் அடித்து சுக்குநூறாக்கிவிடுவர். போதாத குறைக்கு, எரியூட்டியும் விடுவர். அந்தளவுக்கு அடிமேல் அடி விழும்.

அதேபோலதான், நெருக்கடியின் விளிம்பில் தொங்கிக்கொண்டிருக்கும் இலங்கை வாழ் மக்களின் வாழ்க்கையிலும் அடிமேல் அடி விழுந்து கொண்டே இருக்கின்றது.

கொரோனா தொற்று ஏற்பட்டதன் பின்னர், பொதுமுடக்கத்துக்குள் பல மாதங்களாக வீடுகளுக்குள்ளே பலரும் முடக்கப்பட்டனர். அதன்பின்னர் ஒவ்வொரு பிரதேசங்களாக திறக்கப்பட்டு, தடுப்பூசிகளும் ஏற்றப்பட்டன. இன்னுமே தடுப்பூசி ஏற்றும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

வருமானம் இன்றி வீடுகளுக்குள்ளே முடக்கப்பட்டிருந்த மக்கள், இருப்பதைக் கொண்டு ஏதோ சமாளித்துக்கொண்டனர். எனினும், பெரும்பாலான இடங்களில் இந்த சுகாதார பழக்கவழக்கங்கள் இன்னுமே கடைப்பிடிக்கப்படுகின்றன. பல இடங்களில் கைவிடப்பட்டுவிட்டன. ஆக, கொரோனா மீதிருந்த அச்சத்தில் இருந்து மக்கள் விடுபட்டுக்கொண்டனர்.

இதற்கிடையில் நாட்டில் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடிக்குள் இருந்து விடுபடுவதற்குள் ‘குரங்கம்மை’ தலையைத் தூக்க ஆரம்பித்துவிட்டது. உலக சுகாதார ஸ்தாபனமும் கடுமையான எச்சரிக்கையை விடுத்துள்ளது. பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கும் நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு போதியளவான நோயெதிர்ப்பு சக்திகளைக் கொண்ட உணவுகள் கிடைப்பதில்லை.

அதனால், எந்தத் தொற்றாக இருந்தாலும் விரைவில், ஆக்கிரமித்து ஆட்டிப்படைத்துவிடும். மிகவேகமாக அடுத்தவர்களுக்கும் தொற்றிவிடும். ஆகையால், சுகாதார நடைமுறைகளை முறையாகவும் இறுக்கமாகவும் கடைப்பிடிப்பதே எங்களிடமிருக்கும் ஒரேயோர் இலகுவான வழியாகும்.

இதற்கிடையே கொரோனா தொற்றும் தலைத்தூக்கியுள்ளது. அதனால்தான், பொது இடங்களில் முகக்கவசத்தை அணிவதும், சுகாதார வழிகாட்டல்களை கடைப்பிடிப்பதும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. கொரோனா, பொருளாதார நெருக்கடி ஆகியவற்றிலிருந்து கொஞ்சம், கொஞ்சமாக மீண்டெழுந்து கொண்டிருக்கையில், குரங்கம்மை தலைத்தூக்க முயற்சிக்கிறது. கொரோனா மீண்டும் தலைவிரித்தாட முயற்சிக்கின்றது.

இவ்வாறான பெருந்தொற்றுகள் பரவாமல் இருக்க, மக்களே உஷாராக இருக்கவேண்டும். சுகாதார வழிகாட்டல்களை இறுக்கமாக கடைப்பிடித்தே ஆகவேண்டும். இல்லையேல், மற்றுமொரு நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுவிடுவோம். பொருளாதார நெருக்கடிக்குள் விழுந்து விழிபிதுங்கி நிற்கும் அரசாங்கத்திடமும் எவ்விதமான நிவாரணங்களையும் எதிர்பார்க்கமுடியாது.

ஆகையால், சுகாதார அமைச்சு, திணைக்களங்களின் அறிவுறுத்தல்களை முழுமையாகக் கடைப்பிடிக்க வழிசமைக்க வேண்டும். அத்துடன், தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்ளாமல் இருப்பவர்கள். அதற்கு முயற்சிக்க வேண்டும். தானும், தன்னைச் சூழ இருப்பவர்களும் சுகாதார முறைமைகளைக் கடைப்பிடிக்கின்றனரா என்பதை உறுதிப்படுத்தவேண்டும். இவற்றின் ஊடாகவே மீண்டுமொரு முடக்கத்தை தடுக்கமுடியும் என்பதை நினைவில் கொள்க.



## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





## வாழ்வியல் தரிசனம்

ஒருவருக்கு நெஞ்சத்தில் பலவித போராட்டங்கள் ஆட்கொள்ளும்போது என்னதான் செய்யமுடியும்? கோவில்களுக்குச் சென்று தியானம் செய் என்று சிலர் அறிவுரை கூறுவார்கள். துன்பமான நிலையில் மனதை ஒருநிலைப்படுத்தி, தியானம் செய்ய முடியுமா என ஒரு கேள்வி உண்டாகலாம். ஒருநிலையில் இயங்காமல் என்ன காரியம் செய்யலாம். வாசிக்க விருப்பம் வராது; எப்பொழுதும் செய்யும் காரியங்களில் ஈடுபடவும் ஆர்வம் வராது. ஏன் உணவு உண்ணவும் விருப்பப்பட மாட்டார்கள். இந்த வேளையில் தனிமைகூடப் பொருந்தாது. யோசனைகள் தான் அதிகரிக்கும். வெறுப்பு ஓங்கும்போது, ஸ்தம்பித நிலைக்கு மனிதர்கள் ஆட்படுகின்றனர்.

அன்பான இதயங்களை நாடுவதே மனக் குமைச்சலை அழிக்கும் ஒருவழியாகும். மக்களுடன் இணையும்போது, இதய பாரங்கள் மெதுவாகக் கரைந்துவிடும். எம்மிடம் ஒருவரோ அல்லது பலரோ நேயம், ஆதரவு, கனிவு காட்டினால், நான் தனிமைப்பட்டவர் என்ற எண்ணம் வரமாட்டாது. நல்ல நண்பர்களுடன் பேசிப்பாருங்கள். எல்லாப் பாரங்களும் எப்படிப் பறந்து போயிற்று என்ற நிலை உருவாகும். மக்களோடு மக்களாக இயங்கினால், நீங்கள் ஒருவரல்ல ஒரு கூட்டம் என்பதை தெரிந்துவிடுவீர்கள்.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

# ஆட்சியாளர்கள் மாறலாம்; ஆட்சியமைப்பு மாறாது



எம்.எஸ்.எம். ஐயூப்

கோட்டாபய ராஜபக்‌ஷ, கடந்த 14ஆம் திகதி ஜனாதிபதி பதவியை இராஜினாமாச் செய்ததை அடுத்து, புதன்கிழமை (20) நாடாளுமன்றத்தில் புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக நடைபெற்ற வாக்கெடுப்பில், ரணில் விக்கிரமசிங்க மட்டும் வெற்றி பெறவில்லை. நாட்டை விட்டுத் தப்பி ஓட வேண்டிய நிலையில் இருந்த ராஜபக்‌ஷர்களும் மாபெரும் வெற்றியை அடைந்துள்ளனர்.

பொருளாதார நெருக்கடியின் விளைவாக வெடித்த மக்கள் எழுச்சியின் காரணமாக, அசைக்க முடியாதவர்கள் என்று பலர் கருதிய, நாட்டில் பலம்வாய்ந்த அரசியல்வாதிகளான ராஜபக்‌ஷ சகோதரர்கள் மூவர், கடந்த மூன்று மாதங்களில் ஒன்பதாம் திகதிகளில் ஒருவருக்குப் பின் ஒருவராக வீழ்த்தப்பட்டனர்.

ஏப்ரல் ஒன்பதாம் திகதி, ஆர்ப்பாட்டக்காரர்கள் காலிமுகத்திடலில் ஜனாதிபதியின் அலுவலகத்தின் நுழைவாயிலை மறித்து, நிரந்தர ஆர்ப்பாட்டத் தளமொன்றை அமைத்தனர்.

மே ஒன்பதாம் திகதி, அந்த ஆர்ப்பாட்டக்காரர்களை தாக்க குண்டர்களை ஏவி, அதனால் ஏற்பட்ட பதற்ற நிலை காரணமாக அன்றே, அப்போதைய பிரதமர் மஹிந்த, பிரதமர் பதவியை இராஜினாமாச் செய்ய நேர்ந்தது.

நாட்டில் ஆர்ப்பாட்டங்கள் மேலும் பரவிய நிலையில், ஜூன் ஒன்பதாம் திகதி பசில் அப்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ, நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்தார்.

மக்கள் எழுச்சி உச்சக் கட்டத்தை அடைந்த நிலையில், ஜூலை ஒன்பதாம் திகதி கோட்டாபய ராஜபக்‌ஷ, தமது இராஜினாமாவுக்கான திகதியை அறிவித்தார்.

கோட்டா தமது இராஜினாமாவை அறிவித்ததை அடுத்து, ஜூலை 12 ஆம் திகதி பசில் நாட்டை விட்டு வெளியேற முயன்றார். ஆனால், கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து, சில விமானப் பிரயாணிகள் அவருக்கு எதிர்ப்பு தெரிவித்து அச்சுறுத்தியதாலும் விமான நிலையத்தில் ‘சில்க் ரூட்’ வழியூடாக அவர் செல்ல முயன்ற போது, அந்த வழியில் கடமையாற்றிய அதிகாரிகள், கடமையாற்ற மறுத்ததன் காரணமாகவும் அவர் பயணத்தை கைவிட்டு வீடு திரும்பினார்.

அன்றைய நிலையில், மஹிந்த தலைமறைவாக வாழ்ந்தார். கோட்டாவும் தமது இராஜினாமாவை அறிவித்துவிட்டு தலைமறைவாகி இருந்தார். நாட்டைவிட்டுத் தப்பி ஓட முயன்ற பசில் திருப்பி அனுப்பப்பட்டார். பல மாதங்களாக இவ்வாறு ராஜபக்‌ஷர்களை அச்சுறுத்திய நிலை, பசில் நாட்டைவிட்டு வெளியேற முயன்ற நாளிலிருந்து, ஒரு வாரத்துக்குள் மறுபக்கம் திரும்பியது. இப்போது ராஜபக்‌ஷர்கள் மீண்டும் தமது அதிகாரத்தை கைப்பற்றிக் கொண்டுள்ளனர்.

விமான நிலையத்தில் இருந்து திருப்பி அனுப்பப்பட்ட பசில், அன்றே தமது தந்திரோபாயங்களை மாற்றிக் கொண்டார். அதுவரை அவர் ரணிலை விரும்பவில்லை. மே மாதம் 12ஆம் திகதி, பொருளாதார நெருக்கடியின் காரணமாகவும் மஹிந்தவின் இராஜினாமாவின் பின்னணியிலும், ஜனாதிபதி கோட்டாபய செய்வதறியாது ரணிலை பிரதமராக நியமித்த போதும், பசில் அதை விரும்பவில்லை என்றே கூறப்படுகிறது. எனினும், அதற்கிடையில் நாட்டு நிலைமை மாறியதன் காரணமாக, அவர் நாட்டை விட்டு வெளியேற முற்பட்ட போது, அந்த முயற்சி தோல்வியடையவே ரணிலை பாவித்தே, ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு பதிலடி கொடுக்க திட்டம் வகுத்தார்.

அதன்படியே அவரது கட்டுப்பாட்டில் உள்ள ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, ரணிலை அடுத்த ஜனாதிபதியாக, தமக்கு பெரும்பான்மையுள்ள நாடாளுமன்றத்தின் மூலம் தெரிவு செய்ய நடவடிக்கை எடுத்தது. இப்போது ரணில் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டாலும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவின் அமைச்சரவையையே அவர் மீண்டும் நியமித்துள்ளார்.

கோட்டாவின் அமைச்சரவையில் இருந்த ஜீ.எல் பீரிஸ் மட்டும், புதிய அமைச்சரவையில் இல்லை. ராஜபக்‌ஷர்களை எதிர்த்து டலஸ் அழகப்பெருமவை ஜனாதிபதி வேட்பாளராக பீரிஸ், நாடாளுமன்றத்தில் பிரேரித்தமையால் இந்த மாற்றம் இடம்பெற்றுள்ளது போலும்.

ஜீ.எல் பீரிஸுக்குப் பதிலாக கோட்டாவின் சட்டத்தரணியான அலி சப்ரியே வெளிநாட்டமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். அதாவது, எல்லாம் ராஜபக்‌ஷர்களுக்கு வேண்டியவாறே நடைபெறுகிறது. நாடாளுமன்றத்தில் நடைபெற்ற இந்த ஜனாதிபதித் தேர்தலானது, இலங்கை அரசியல்வாதிகளுக்கு கொள்கை, தேசப்பற்று, இனப்பற்று, ஊழல் எதிர்ப்பு போன்றவை எல்லாம், மக்களை ஏமாற்றி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான வெறும் கருவிகளே என்பதை மிகவும் தெளிவாக எடுத்துக் காட்டியது.

ரணில் சமாதான பேச்சுவார்த்தைகள் மூலம், நாட்டை புலிகளுக்கு தாரைவார்த்துக் கொடுக்க முயன்றதாக, இப்போது பொதுஜன பெரமுனவின் தலைவர்களாக உள்ளவர்கள் அப்போது குற்றஞ்சாட்டினர். ரணிலுக்கு தேசிய கலாசாரத்தைப் பற்றிய அறிவோ, உணர்வோ இல்லை என்றனர். அவர் மேற்கத்திய ஏகாதிபத்தியவாதிகளின் அடிவருடி என்றனர். மத்திய வங்கி பிணைமுறி மோசடியின் பின்னால் இயங்கியவர் என்றனர். ஆனால், அதே பொதுஜன பெரமுனவினர் அதே ரணிலை, நாட்டின் மிகவும் உயரிய பதவியான ஜனாதிபதி பதவிக்கே தெரிவு செய்துள்ளனர்.

அதேபோல், ராஜபக்‌ஷர்களை ரணில் இனவாதிகளாகவே சித்திரித்தார். 2015ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர், ராஜபக்‌ஷர்கள் உலகிலேயே மிகவும் மோசமான திருடர்கள் என, ரணிலும் ஐக்கிய தேசிய கட்சியும் கூறித் திரிந்தனர்.

இன்று அதே ரணில் பொதுஜன பெரமுனவின் தலைவர்களை பாதுகாக்க முன்வந்துள்ளார். ரணிலின் பின்னால் இருப்பது, நாட்டில் மிகவும் மோசமான இனவாதிகளான ராஜபக்‌ஷர்களே என்பது தெளிவாக இருந்தும், தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் சி.வி. விக்னேஸ்வரன், ரணிலுக்கு வாக்களிக்க முடிவு செய்தார்.

இதேபோல், விமல் வீரவன்ச போன்றோர் தமிழ் தேசிய கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ் கட்சிகளை எப்போதும் பிரிவினைவாதிகளாகவும் புலிகளின் மறுஅவதாரமாகவுமே சித்திரித்து வந்தனர். தமிழ் கட்சிகளும் இந்தத் தென்பகுதி கட்சிகளை இனவாதிகளாகவே வடக்கில் சித்திரித்தன. ஆனால் அவர்கள் சிறியதொரு விடயமொன்றுக்காகவன்றி, நாட்டின் அடுத்த தலைவரை தெரிவு செய்வதற்காக ஓரணியில் ஒன்று சேர்ந்தனர்.

தேசப்பற்று, இனவாதம், தேசிய கலாசாரம், ஆகியவற்றைப் பற்றியும் ஊழல் எதிர்ப்பைப் பற்றியும், அரசியல்வாதிகள் கூறும் எந்தக் கூற்றிலும் நேர்மையோ பாரதூரத்தன்மையோ இல்லை என்பதை உணர, இந்தத் தேர்தல் கூட்டுகள் சிறந்த உதாரணங்களாகும்.

கோட்டா பதவியையும் நாட்டையும் விட்டு வெளியேறுவதற்கும், ரணில் ஜனாதிபதியாக வருவதற்கும் பொதுமக்களின் போராட்டங்களே காரணமாகின. அந்தப் போராட்டக்காரர்களைத் தாக்க நடவடிக்கை எடுத்த மஹிந்த, அதன் காரணமாகவே பிரதமர் பதவியை இராஜினாமாச் செய்த போது, ரணில் அந்த இடத்துக்கு நியமிக்கப்பட்டார். அதன் பின்னரும், ரணில் ‘கோட்டா கோ கம’வுக்கு சகல வசதிகளையும் வழங்குவதாக பகிரங்கமாகவே கூறினார்.

அதன் பின்னர், ரணில், தமக்கு நாட்டில் அதி உயர்பதவிக்கு வர உதவிய போராட்டக்காரர்களை, வெள்ளிக்கிழமை (22) அதிகாலை முப்படைகளைக் கொண்டு தாக்கினார். தாம் அன்று அந்த இடத்தை விட்டு வெளியேறுவதாக போராட்டக்காரர்கள் அறிவித்து இருந்த நிலையிலேயே, அவர்கள் தாக்கப்பட்டனர்.

ஆரம்பத்திலேயே, மக்கள் மனதில் தம்மைப் பற்றிய அச்சத்தை ஊட்டி வைத்தால், தமக்கு எதிராக மக்கள் போராட மாட்டார்கள் எனவும் அவர் நினைத்திருக்கலாம்.

ரணில் தற்போதைய நெருக்கடியை தமது சொந்த உயர்வுக்காக மிகவும் சாதுரியமாக பாவித்துள்ளார். அரசாங்கம் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வில்லாமல் தடுமாறும் போது, சர்வகட்சி மாநாடு போன்ற இடங்களில் தமது பொருளியல் அறிவைக் காட்டி உரையாடினார்.

அந்தநிலையில் கோட்டா அவரை பிரதமராக நியமித்தார். கோட்டா பதவி விலகிய போது, ரணிலும் பிரதமர் பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டும் என்று சகல கட்சிகளும் கூறின. “சர்வகட்சி அரசாங்கத்தை நிறுவுங்கள்; நான் போகிறேன்” என்றார். அதற்கிடையில், ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் என்பது அவருக்குத் தெரியும். அதன்படி அவர் ஜனாதிபதியானார்.

ஆனால், பொருளாதார நெருக்கடிக்கு ரணிலிடம் தீர்வு இருக்கிறதா என்பதே முக்கிய கேள்வியாக இருக்கிறது. அவர் பிரதமராக நியமிக்கப்படுவதற்கு முன்னர், அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் ஆரம்பித்த வேலைத்திட்டத்தையே ரணிலும் முன்னெடுத்துச் செல்கிறார். அதன் மூலம் தற்காலிகமாக நிலைமை சீராகலாம். நாட்டை கடனற்ற நாடாக மாற்றும் திட்டம், எந்தவோர் அரசியல்வாதியிடமும் இல்லை.

மக்கள் விடுதலை முன்னணியும் சில தமிழ் கட்சிகளும் தவிர்ந்த நாடாளுமன்றத்திலுள்ள ஏனைய சகல கட்சிகளின் ஒவ்வோர் ஆட்சியின் போதும் அரசியல்வாதிகள் நாட்டை சுரண்டி வாழ்ந்ததையும் நாடு மேன்மேலும் கடன்கார நாடாக்கியதையும் மட்டுமே கண்டோம். எனவே, ஆட்சி மாறினாலும் பெரும் எதிர்ப்பார்ப்புகளை வைத்திருக்க முடியாது.

## கடிதங்கள்

### குடிநீர் தருமாறு கோரிக்கை



கிளிநொச்சி, பூநகரி, ஞானிமடம், கறுக்காய் தீவு ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் வழங்கப்படாமையால், பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக இந்தப் பகுதிகளில் வாழும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

புநகரி பிரதேசமானது வருடம் முழுவதும் குடிநீர் நெருக்கடியை எதிர்கொள்ளுகின்ற ஒரு பிரதேசமாக காணப்படுகிறது. இங்கு குடிநீர் விநியோகத்துக்காக பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டாலும், அவை இழுத்தடிக்கப்பட்டு, கிடப்பில் போடப்பட்டு வருகின்றன. இதனால் குறித்த பிரதேசங்களில் வாழும் ஏராளமான மக்கள், குடிநீரைப் பெற்று கொள்வதில் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை, குடிநீர் வளம் கொண்ட பிரதேசங்களுக்கு குடிநீர் விநியோகம் மேற்கொள்வதுடன், எந்தவித குடிநீர் வசதியும் இல்லாத தங்களுடைய பிரதேசத்தின் ஊடாக, குழாய்கள் பொருத்தி, வேறு கிராமங்களுக்கு நீர் கொண்டு செல்லும் போதும், தமக்கு இதுவரை குடிநீர் தரவில்லை என இப்பிரதேச மக்கள் தெரிவிக்கிறார்கள்.

இப்பிரதேசத்தில் 294க்கு மேற்பட்ட குடும்பங்கள், குடிநீரின்றி பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். கடந்த காலங்களில் பிரதேச சபையால் குடிநீர் விநியோகம் வழங்கப்பட்டிருந்தாலும் எரிபொருள் தட்டுப்பாட்டைக் காரணம் காட்டி, குடிநீர் நிறுத்தப்பட்டு உள்ளது.

இதுதொடர்பாக இந்த மாதம் ஏழாம் திகதி, ஆர்ப்பாட்ட ஊர்வலமாகச் சென்று, பூநகரி பிரதேச செயலாளரிடம் மகஜர் கையளிக்கப்பட்ட போதும் இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.

-யது பாஸ்கரன்

புதுடெல்லி

# புதுடெல்லியிலும் குரங்கம்மை

## இந்தியாவில் பாதிப்பு எண்ணிக்கை 4ஆக அதிகரிப்பு

புதுடெல்லியைச் சேர்ந்த 31 வயது நபருக்கு குரங்கம்மை பாதிப்பு உறுதியாகியுள்ளது. இதன் மூலம் இந்தியாவில் குரங்கம்மை பாதிப்பு எண்ணிக்கை நான்காக அதிகரித்து உள்ளது. ஏற்கெனவே, கேரளாவில் மூன்று பேருக்கு குரங்கம்மை பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

பாதிப்புக்கு ஆளான நபர் மேற்கு டெல்லியைச் சேர்ந்தவர் ஆவார். அண்மையில் வெளிநாடு பயணம் ஏதும் மேற்கொள்ளவில்லை என்பதால் அவருடன் தொடர்பில் இருந்தவர்கள் யார் என்ற விவரங்களை அரசு திரட்டி வருகிறது.



இவருக்கு குரங்கம்மை அறிகுறி தென்பட்ட நிலையில், மருத்துவமனை மாதிரிகளை எடுத்து புனேவில் உள்ள தேசிய வைராலஜி நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்தச் சோதனை முடிவில், இவருக்கு குரங்கம்மை பாதிப்பு இருப்பது உறுதியாகியுள்ளது. குரங்கம்மை பாதிப்பு என்பது ஒரு நபரில் இருந்து இன்னொரு நபருக்கு நேரடி தொடர்பு மூலமாகவே பரவுகிறது. மேலும், 95 சதவீத குரங்கம்மை பரவலுக்கு பாலியல் தொடர்பான நெருக்கங்களே காரணம் எனவும் ஆய்வில் தெரியவந்துள்ளது.

இராய்பூர்

# கஞ்சா புகைக்க முயற்சிக்கலாம்

## கிருஷ்ணமூர்த்தியின் கருத்துக்கு எதிர்ப்பு



மது அருந்துவதை நிறுத்திவிட்டு, கஞ்சா புகைக்க முயற்சிக்கலாம் என்று சத்தீஸ்கர் மாநில பாரதி ஜனதா கட்சி (பா.ஜ.க) எம்.எல்.ஏ கிருஷ்ணமூர்த்தி பந்தி தெரிவித்துள்ள கருத்துக்கு கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

சத்தீஸ்கர் மாநிலத்தில் பூபேஷ் பாகெல் தலைமையிலான காங்கிரஸ் ஆட்சி நடைபெற்று வருகின்றது. இந்த நிலையில், அம்மாநில பா.ஜ.க எம்.எல்.ஏ. கிருஷ்ணமூர்த்தி பந்தியின் கருத்துக்கு அம்மாநில காங்கிரஸ் கட்சி கடும் கண்டனம் தெரிவித்து இருக்கிறது.

> **பாலியல் பலாத்காரம், கொலை, கொள்ளை போன்ற குற்றங்கள் மதுப்பழக்கத்தின் காரணமாகவே அதிகரித்து இருக்கிறது. ஆனால், கஞ்சா அடிப்பதால் அத்தகைய குற்றங்கள் அதிகரிக்காது என்று பா.ஜ.க எம்.எல்.ஏ தெரிவித்து இருந்தார்**

பா.ஜ.க எம்.எல்.ஏ கருத்து "பாலியல் பலாத்காரம், கொலை, கொள்ளை போன்ற குற்றங்கள் மதுப்பழக்கத்தின் காரணமாகவே அதிகரித்து இருக்கிறது. ஆனால், கஞ்சா அடிப்பதால் அத்தகைய குற்றங்கள் அதிகரிக்காது" என்று பா.ஜ.க எம்.எல்.ஏ தெரிவித்து இருந்தார். ஒரு மக்கள் பிரதிநிதி கஞ்சா போன்ற தடை செய்யப்பட்ட போதைப் பொருளை எப்படி விளம்பரப்படுத்தலாம் என்று காங்கிரஸ் கட்சி கேள்வி எழுப்பி வருகிறது.

தனது பேச்சுக்கு கடும் எதிர்ப்பு எழுந்துள்ள நிலையில், இதுகுறித்து பா.ஜ.க எம்.எல்.ஏ கிருஷ்ணமூர்த்தி பந்தி விளக்கம் அளித்து இருக்கிறார். அதில், "இது என்னுடைய தனிப்பட்ட கருத்து. இதற்கு முன்பாக மாநில சட்டப்பேரவையிலேயே இது குறித்து விவாதித்தவன் நான். பாலியல் பலாத்காரம், கொலை, கொள்ளை போன்ற பிரச்சினைகளுக்கு எதோ ஒரு வழியில் மது பழக்கம் காரணமாக இருக்கிறது" என்றார்.

சென்னை

# சின்னம், கொடியை தமதாக்க நீதிமன்றம் செல்ல முஸ்தீபு

## எடப்பாடி தரப்பு தீவிர ஆலோசனை



அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தில் (அ.தி.மு.க) இருந்து நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ள ஓ.பன்னீர்செல்வமும், அவரது ஆதரவாளர்களும் எடப்பாடி பழனிசாமிக்கு எவ்வளவு முட்டுக்கட்டை போட முடியுமோ அவ்வளவு முட்டுக்கட்டை போட வேண்டும் என்பதில் மிக மிக தீவிரமாக உள்ளனர்.

அ.தி.மு.கவின் அனைத்து அமைப்புகளிலும் புதிய நிர்வாகிகளை நியமிப்பதன் மூலம், மீண்டும் கட்சியை கைப்பற்ற முடியும் என்று அவர்கள் முடிவு செய்திருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

ஓ.பன்னீர்செல்வத்தின் நடவடிக்கைகள், சட்ட சிக்கல்களை ஏற்படுத்தும் என்பதால் அதற்கேற்ப பதிலடி கொடுக்க எடப்பாடி பழனிசாமி அணி தலைவர்கள் தொடர்ந்து ஆலோசனை நடத்தி வருகிறார்கள். ஓ.பன்னீர் செல்வத்தை நிரந்தரமாக முடக்குவது எப்படி என்று சட்ட நிபுணர்களுடன் பேசி வருகிறார்கள்.

தற்போதைய சூழ்நிலையில் அ.தி.மு.கவில் ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் பதவிகள் இல்லை என்று பொதுக்குழு கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு இருப்பதால், அதை அடிப்படையாக வைத்து சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளனர்.

ஓ.பன்னீர் செல்வம் அ.தி.மு.கவில் அடிப்படை உறுப்பினர் பொறுப்பு உள்பட அனைத்து பொறுப்புகளில் இருந்தும் நீக்கப்பட்டு விட்டதால் அ.தி.மு.க என்ற பெயரை பயன்படுத்த கூடாது என்று நீதிமன்றத்தில் வழக்கு தொடர திட்டமிட்டுள்ளனர்.

ஒடிசா

# ஆசைக்கு இணங்க மறுத்த மாணவி எரித்து கொலை

ஒடிசாவில் பாலியல் ஆசைக்கு இணங்க மறுத்த பள்ளி மாணவியை உயிருடன் தீயிட்டு எரித்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது,

ஒடிசா மாநிலம் பாலசோர் மாவட்டத்தில் உள்ள பரின்கியா என்ற பகுதியில் தயானதீசட்னா என்பவரின் வீட்டில் அவரின் மனைவியிடம் பாடசாலை மாணவி ஒருவர் தனியார் வகுப்புக்கு சென்று வந்துள்ளார்.

மாணவி படிக்கவந்த மாணவியிடம் பாலியல் ஆசைக்கு இணங்க தயானதிட்சனா வற்புறுத்தியுள்ளார். இதனால், அச்சமடைந்த மாணவி, ஒரு கட்டத்தில் தனியார் வகுப்புக்கு வருவதை நிறுத்திவிட்டார்.

இந்த நிலையில், வீட்டிற்கு அருகில் உள்ள கடையில் மாணவி பென்சில் வாங்க சென்றுள்ளார். அப்போது தயானதீட்சனா மாணவியை இடைமறித்துள்ளார். அப்போது தன் கையில் வைத்திருந்த மண்ணெண்ணையை மாணவியின் மீது ஊற்றி உயிருடன் தீயிட்டு கொன்றார்.

பாலியல் இச்சைக்கு இணங்க மறுத்த மாணவியை உயிருடன் தீயிட்டு எரித்து கொன்ற சம்பவம் அப்பகுதியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மும்பை

# சிறிய தவறால் எதுவும் நடக்கலாம்

விமானப் பயணத்தின்போது, ஒரு சிறிய தவறால் எது வேண்டுமானாலும் நடக்கலாம் என்று உயர வரம்பை மீறிய கட்டடங்களுக்கு எதிரான வழக்கில், மும்பை உயர்நீதிமன்றம் கருத்துக் கூறியது.

மும்பை நகரில் உள்ள விமான நிலையத்துக்கு அருகே நிர்ணயிக்கப்பட்ட உயர வரம்பை மீறி, கட்டடங்கள் கட்டுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரி, சட்டத்தரணி யஷ்வந்த் செனாய் பொதுநல வழக்கை தாக்கல் செய்தார்.

அவர் தனது மனுவில், 'இந்தக் கட்டடங்கள் இங்குள்ள விமான நிலையத்தில் விமானம் தரையிறங்குவதற்கு ஆபத்தை ஏற்படுத்துகின்றன. இது ஒரு நாள் விபரீத சம்பவங்களுக்கு வழிவகுக்கும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி தீபங்கர் தத்தா மற்றும் நீதிபதி எம்.எஸ்.கார்னிக் அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதி கூறியதாவது:

"சமீபத்தில் அஜய் தேவ்கன் நடித்த 'ரன்வே 34' திரைப்படத்தை பார்க்க நேர்ந்தது. எந்தச் சம்பவமும் விமானியை பொறுத்தது இல்லை. அனைத்தும் விமான போக்குவரத்து



கட்டுப்பாட்டை பொறுத்தது. நாம் விமானம் தரையிறக்கப் போவதாகவோ அல்லது புறப்பட போவதாகவோ விமானி கூறுவதை நம்புகிறோம். வெளியில் வானிலை சீராக இருப்பதால் எல்லாம் நன்றாகச் செல்வதாக நம்புகிறோம். ஆனால், இது அனைத்தும் வேறு பல காரணிகளை பொறுத்தன. அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒரு சிறிய தவறு நடந்தால், எது வேண்டுமானாலும் நடக்கலாம்" என்று நீதிபதிகள் தெரிவித்தனர். இந்த வழக்கு வெள்ளிக்கிழமை (29) மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.



# சில்லாலை புனித யாகப்பர் தேவாலயம்...

சில்லாலை புனித யாகப்பர் தேவாலய வருடாந்த திருவிழா, மறைக்கல்வி நிலைய இயக்குநர் அருட்பணி ஜேம்ஸ் அடிகளார் தலைமையில், நேற்று முன்தினம் (25) நடைபெற்றது. திருவிழா திருப்பலியைத் தொடர்ந்து புனிதரின் திருச்சொரூப பவனியும் நடைபெற்றது. (படங்கள்: வி. நிதர்ஷன்)













# சிரமதானம்...

மட்டக்குளி, காக்கைத்தீவு கரையோரத்தில் கடற்படையினர், ஞாயிற்றுக்கிழமை (24) சிரமதானப் பணிகளை முன்னெடுத்திருந்தனர்.













# வாகரை பழங்குடியினருக்கு...

அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள வாகரை, குஞ்சங்கற்குளம் பகுதி பழங்குடியினருக்கு உலர் உணவுப்பொருட்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. (படங்கள்: எம்.எஸ்.எம். நூர்தீன், ஜவ்பர்கான்)

# தமிழ்நாட்டின் அன்பளிப்பு...

தமிழ்நாட்டு அரசாங்கமும் மக்களும், இலங்கை மக்களுக்கு அன்பளிப்பாக வழங்கிய மூன்றாவது தொகுதி உதவிப்பொருட்கள், கொழும்பு துறைமுகத்தில் வைத்து நேற்று (26) கையளிக்கப்பட்டன.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேயின் தலைமையிலான தூதரக அதிகாரிகளால், அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தலைமையிலான குழுவினரிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டன.

இதில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் எம்.பி ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

இந்த உதவிப் பொருட்களில், 40,000 மெட்ரிக் தொன் அரிசி, 500 மெட்ரிக் தொன் பால்மா, 100 மெட்ரிக் தொன்னுக்கும் அதிகமான மருந்துப் பொருட்கள் அடங்கிய 22 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான உதவிப் பொருட்கள் அடங்கியிருந்தன.









# இலங்கைக்கெதிரான இரண்டாவது டெஸ்டில் 231 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்த பாகிஸ்தான்

இலங்கைக்கெதிரான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், காலியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்த இரண்டாவது டெஸ்டின் நேற்றைய மூன்றாம் நாளில் தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 231 ஓட்டங்களை பாகிஸ்தான் பெற்றுள்ளது.

மூன்றாம் நாளை 7 விக்கெட்டுகளை இழந்து 191 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த பாகிஸ்தான், ஹஸன் அலியின் 21, யசீர் ஷாவின் 26 ஓட்டங்கள் மூலம் சிறிதளவு ஓட்டங்களைச் சேர்த்தபோதும் பிரபாத் ஜெயசூரியா, ரமேஷ் மென்டிஸிடம் (2) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 231 ஓட்டங்களையே பெற்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இலங்கை

இலங்கை: 378/10

(துடுப்பாட்டம்: தினேஷ் சந்திமால் 80, நிரோஷன் டிக்வெல்ல 51, ஒஷாட பெர்ணாண்டோ 50, அஞ்சலோ மத்தியூஸ் 42, திமுத் கருணாரத்ன 40, ரமேஷ் மென்டிஸ் 35, தனஞ்சய டி சில்வா 33 ஓட்டங்கள். பந்துவீச்சு: நசீம் ஷா 3/58, யசீர் ஷா 3/83, மொஹமட் நவாஸ் 2/80, நௌமன் அலி 1/64)

பாகிஸ்தான்: 231/10

(துடுப்பாட்டம்: அக்ஹா சல்மான் 62, இமாம்-உல்-ஹக் 32, யசீர் ஷா 26, ஹஸன் அலி 21 ஓட்டங்கள். பந்துவீச்சு: ரமேஷ் மென்டிஸ் 5/47, பிரபாத் ஜெயசூரிய 3/80 தனஞ்சய டி சில்வா 1/15, அசித பெர்ணாண்டோ 1/62)



இந்தியாவுக்கெதிரான மூன்றாவது ODI இன்று:

## ஆறுதல் வெற்றி பெறுமா மே. தீவுகள்?

மேற்கிந்தியத் தீவுகள், இந்திய அணிகளுக்கிடையிலான மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியானது ட்ரினிடாட்டில் இன்றிரவு இலங்கை நேரப்படி 7 மணிக்கு ஆரம்பிக்கவு/ள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிளிலும் வென்று ஏற்கெனவே தொடரைக் கைப்பற்றியுள்ள இந்தியா, இப்போட்டியில் குழாமிலுள்ள ஏனைய முதலிரண்டு போட்டிகளிலும் விளையாடாத இஷன் கிஷன், ருத்துராஜ் கைகவாட், அர்ஷ்டீப் சிங் ஆகியோருக்கு வாய்ப்பு வழங்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, இந்திய குழாமில் இடம்பெறுவதற்கு சஞ்சு சாம்ஸன் தொடர்ச்சியான குறிப்பிடத்தக்க இனிங்ஸ்களை ஆட வேண்டியுள்ளதுடன், அணியில் தொடருவதற்கு ஷ்ரேயாஸ் ஐயரும் பெரிய இனிங்ஸ்களை ஆட வேண்டியுள்ளது. தவிர, சூரியகுமார் யாதவ்வும் பெரிய இனிங்ஸொன்றை ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் ஆட வேண்டியதாகக் காணப்படுகிறது.

மறுபக்கமாக, மேற்கிந்தியத் தீவுகளின் குழாமிலுள்ள கேசி கார்ட்டியை ஷமராஹ் ப்ரூக்ஸ் அல்லது பிரண்டன் கிங்குக்காகக் களமிறக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

இங்கிலாந்து எதிர் தென்னாபிரிக்கா:

## இன்று ஆரம்பிக்கிறது இருபதுக்கு 20 தொடர்



இங்கிலாந்து, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டித் தொடரானது, பிறிஸ்டோலில் இன்றிரவு இலங்கை நேரப்படி 11 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியுடன் ஆரம்பிக்கின்றது.

ஒய்ன் மோர்கனின் ஓய்வுக்குப் பின்னர் ஜொஸ் பட்லரின் ஆரம்பம் குறிப்பிடத்தக்கதாக அமையாத நிலையில், ஜேஸன் றோயும் அண்மைய காலங்களில் குறிப்பிடத்தக்களவு சோபிக்காத நிலையில் இவையனைத்தையும் திருத்திக் கொள்வதற்கான வாய்ப்பாக இத்தொடர் காணப்படுகிறது.

ஜொனி பெயார்ஸ்டோ, அடில் ரஷீட் குழாமுக்குத் திரும்பியிருப்பது இங்கிலாந்துக்கு பலத்தை அளிப்பதுடன் றீஸ் டொப்லி, டேவிட் வில்லி, சாம் கர்ரன் ஆகியோர் கவனிக்கப்பட வேண்டியவர்களாகக் காணப்படுகின்றனர்.

தென்னாபிரிக்காவைப் பொறுத்த வரையில் டேவிட் மில்லர், குயின்டன் டி கொக், ஹென்றிச் கிளாசென், ஏய்டன் மார்க்ரம், றஸி வான் டர் டுஸன், றீலி றொஸோ என அச்சுறுத்தும் வரிசையாகவும் அதேயளவுக்கு பந்துவீச்சிலும் ககிஸோ றபாடா, அன்றிச் நொர்ட்ஜே, தப்ரையாஸ் ஷம்சி என விக்கெட்டுகளைக் கைப்பற்றக்கூடியவர்களையும் கொண்டுள்ளது.

ஒட்டமாவடி ஓ.எஃப்.எல் கோல்ட் கிண்ணத் தொடர்:

## சம்பியனானது வாழைச்சேனை நியூ ஸ்டார்

எச்.எம்.எம். பர்ஸான்



ஓட்டமாவடி உதைப்பந்தாட்ட சம்மேளனம் நடாத்திய கோல்ட் கப் தொடரில் வாழைச்சேனை நியூ ஸ்டார் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

ஓட்டமாவடி அமீர் அலி பொது விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற பத்து அணிகள் பங்கு பற்றிய இந்த கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டியில் வாழைச்சேனை அல் அக்ஸாவை 5-0 என்ற கோல் கணக்கில் வென்றே நியூ ஸ்டார் சம்பியனானது.

கென்யா

பஸ் கவிழ்ந்து விபத்து:

# 30 பேர் உயிரிழப்பு

மத்திய கென்யாவில் 40 மீற்றர் உயரமுடைய பாலத்தில் இருந்து பஸ் ஒன்று ஆற்றுக்குள் விழுந்து விபத்துக்குள்ளானதில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 30 ஆக அதிகரித்துள்ளது.


கடந்த 24 ஆம் திகதி மேரு கவுண்டியில் இருந்து நைரோபி நோக்கி நெடுஞ்சாலை வழியாக அதிவேகமாக சென்றுகொண்டிருந்த பஸ்ஸே இவ்வாறு வேகக் கட்டுப்பாட்டை இழந்து நித்தி ஆற்றின் மீது விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.



இவ்விபத்தில் 30 பேர் உயிரிழந்துள்ள நிலையில் பலர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்திய சாலை சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனா

## முன்னாள் மனைவியை தீ வைத்து எரித்த பிரபலம்



சீனாவில் நபர் ஒருவர் தனது முன்னாள் மனைவியைத் தீ வைத்து எரித்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சீனாவின் சிச்சுவான் என்ற மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் தங்லு மற்றும் அவரது மனைவியான லமு.

டிக் டொக் உள்ளிட்ட சமூக ஊடகங்களில் வீடியோக்களை வெளியிடுவதன் மூலம் இவர்கள் பிரபலமடைந்துள்ளனர்.

11 ஆண்டுகள் ஒன்றாக வாழ்ந்த இவர்கள் கடந்த 2020 ஆம் ஆண்டு கருத்து வேறுபாடு காரணமாக விவகரத்து செய்துள்ளனர்.

ஆனால், விவாகரத்து செய்த பின்னரும் தன்னை மீண்டும் திருமணம் செய்து கொள்ளுமாறு லமுவை அவரது முன்னாள் கணவர் தங் லு கட்டாயப்படுத்தி வந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த வருடம் லமு தனது சமூகவலைதள செயலியான டுவ்யுனில் புதிய வீடியோ தொடர்பாக ஒன்லைனில் “நேரலையில் ” வீடியோ வெளியிட்டுக்கொண்டிருந்தார்.

இதனை ஆயிரக்கணக்கானோர் பார்த்துக்கொண்டிருந்துள்ளனர். இதன் போது அங்கு திரடீரென வந்த தங்லு , தன் முன்னாள் மனைவி லமு உடல் முழுவதும் பெட்ரோல் ஊற்றி தீ வைத்துள்ளார். இதனை நேரலையில் பலரும் பார்வையிட்டுள்ளனர்.

இதனையடுத்து படுகாயங்களுக்குள்ளான லமு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி சில வாரங்களில் உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் இந்த குற்றம் தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வந்த நிலையில் நேற்று முன்தினம் (24) தங் லுவுக்கு தூக்கு தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அமெரிக்கா

## இங்கு சென்றால் மரணம் உறுதி



அமெரிக்காவிலுள்ள மியாமி பல்கலைக்கழகத்தை சேர்ந்த ஆய்வாளர்கள் அண்மையில் செங்கடல் பகுதியில் ஓர் ஆய்வை மேற்கொண்டிருந்தனர்.

ஆய்வின் முடிவில் அக் கடலின் அடியில் 1.1 கிலோ மீற்றர் அடி ஆழத்தில் அதிசயமான ஓர் இடம் கண்டுபிடிக்கப்பட்டது. அந்த இடத்தில் ஒக்ஸிஜன் வாயுவே இல்லை என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் குறித்த பகுதி முழுவதும் உப்பு தன்மை நிறைந்திருப்பதாகவும், குறிப்பாக அப்பகுதியில் விசத்தன்மையுடைய ஹைட்ரஜன் சல்பேட் என்னும் வேதிப்பொருளும் கலந்திருப்பதாகவும் இதனால் , இந்தப் பகுதிக்குள் செல்லும் எந்த உயிரினமும் உயிருடன் திரும்புவதில்லை என்று விஞ்ஞானிகள் கூறியிருக்கிறார்கள்.

மரணத்தை உண்டாக்கும் அதிக ஆபத்தான அதிசயப் பகுதியை ஆய்வாளர்கள் கண்டுபிடித்திருக்கும் நிகழ்வு கடல்சார் ஆய்வில் முக்கியத்துவம் வாய்ந்ததாக கூறப்பட்டிருக்கிறது.

துருக்கி

## விமான உணவில் எட்டிப் பார்த்த பாம்பின் தலை



விமானமொன்றில் பரிமாறப்பட்ட உணவில் பாம்பின் தலையொன்று இருந்த சம்பவம் துருக்கியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

துருக்கியின் தலைநகரான அங்காராவில் இருந்து ஜேர்மனிக்குக் கடந்த ஜூலை மாதம் 21ஆம் திகதி புறப்பட்ட விமானத்திலேயே இச்சம்பவம் நடந்துள்ளது.

சம்பவ தினத்தன்று குறித்த விமானத்தில் பரிமாறப்பட்ட உணவை உண்டுகொண்டிருந்த ஊழியர் ஒருவர் அவ்வுணவில் பாம்பின் தலையொன்று இருப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்துள்ளார். மேலும் அதனை வீடியோவாக எடுத்து டுவிட்டரிலும் பதிவிட்டுள்ளார்.

இது சமூக ஊடகங்களில் வைரலானதைத் தொடர்ந்து, “றித்த விமான நிறுவனமானது, தனக்கு உணவு விநியோகம் செய்யும் நிறுவனத்தின் ஒப்பந்தத்தை நிறுத்தி வைத்துள்ளது.

மேலும் “எங்கள் நிறுவனத்தில் சமைக்கப்படும் உணவுகள் 280 பாகை செல்சியஸ் வெப்பத்தில் சூடாக்கப்படுகின்றன. இப் பாம்பின் தலை பாதி வெந்த நிலையில் இருப்பதன் மூலம், சமைத்த பின் வேறு யாரோ இதை வேண்டுமென்றே சேர்த்து இருப்பார்கள்” என்று தெரிவித்துள்ளது.



மியான்மார்

## முன்னாள் எம்.பி. உட்பட 4 பேருக்கு மரண தண்டனை

மியான்மரில் கடந்த பெப்ரவரி1 ஆம் திகதியிலிருந்து இராணுவ ஆட்சி இடம்பெற்று வருகின்றது.

மியன்மாரில் முன்னாள் எம்.பி. உட்பட 4 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ள சம்பவம் உலகளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மியான்மரில் கடந்த 2020ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடந்த பொதுத்தேர்தலில் ஆளும் ஜனநாயகத்துக்கான தேசிய லீக் கட்சி மீண்டும் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது.

ஆனால் குறித்த தேர்தலில் முறைகேடுகள் நடந்ததாக குற்றம் சாட்டி புதிய அரசு பதவியேற்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து வந்த அந்த நாட்டு இராணுவம், கடந்த ஆண்டு பெப்ரவரி 1ஆம் திகதி ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியது.

அத்துடன் அந்த நாட்டின் தலைவர் ஆங் சான் சூகி உட்பட அரசின் எம்.பி.க்கள் மற்றும் ஜனநாயக அமைப்புகளின் தலைவர்களும் சிறையில் அடைக்கப்பட்டனர்.

குறிப்பாக ஜனநாயகத்துக்கான தேசிய லீக் கட்சியின் ஆட்சியில் எம்.பி.யாக இருந்த பியோ ஜெயா தாவ், இராணுவ வீரர்களை துப்பாக்கியால் சுட்டதாக குற்றம் சாட்டி கடந்த ஆண்டு நவம்பர் மாதம் இராணுவம் அவரை கைது செய்தது.

அதேபோல் பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை மீறியதாக கூறி ஜனநாயக ஆர்வலரான கோ ஜிம்மி என்பவரையும், இராணுவ உளவாளியாக எரித்துக்கொன்றதாக ஹலா மியோ ஆங் மற்றும் ஆங் துரா சாவ் ஆகிய இருவரையும் இராணுவம் கைது செய்தது.
இந் நிலையில் நீதிமன்ற விசாரணையில் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்ட முன்னாள் எம்.பி. பியோ ஜெயா தாவ் உட்பட 4 பேரையும் தூக்கிலிட்டு மரண தண்டனையை நிறைவேற்றியதாக மியான்மர் இராணுவம் அறிவித்துள்ளது.

எனினும் அவர்களது மரண தண்டனை எங்கு, எப்போது நிறைவேற்றப்பட்டது என்பதை மியான்மர் இராணுவம் தெரிவிக்கவில்லை. மியான்மரில் 50 ஆண்டுகளுக்கு பிறகு நிறைவேற்றப்பட்ட முதல் மரண தண்டனை இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஜேர்மனி



## தேங்காய்களை உடைத்து உலக சாதனை

ஜேர்மனியைச் சேர்ந்த முஹமது கஹ்ரிமனோவிக் என்ற நபர் ஒரு நிமிடத்தில் 148 தேங்காய்களை ஒரு கையால் உடைத்து 6ஆவது முறையாக உலக சாதனை படைத்துள்ளார்.

ஒரு நிமிடத்தில் ஒரு தேங்காயை ஒரு கையை பயன்படுத்தி உடைக்க வேண்டும் என்பது விதியாகும்.
அந்தவகையில் அந்நபர் வலது கையை மாத்திரம் பயன்படுத்தி மேசையில் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த தேங்காய்களை உடைத்துச் சாதனை படைத்துள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் புதன்கிழமை, 27 ஜூலை 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.